உ

# அருள் ஒளி







சு.ஏழூர்நாயகம்

## சிவராத்திரி சிறப்பிதழ்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

139

தெல்லிப்பழை, இலங்கை.

மாசி மாதம் - 2019



எழில்மிகு
திருக்கோணேஸ்வரம்
திருக்கோயிலில்
அருள்மிகு சிவனின்
திருக்கோலம்

அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத
வேலன் சுவாமிகளும் அடியவர்களும் யாழ். வருகை



உ



# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

மாசி மாத மலர்

2019

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


## இந்து நாகரிகம் பாடத்தைக் கற்கும் மாணவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியம்

*பாடசாலைகளில் இந்து நாகரிகம், இந்து சமயம் பாடங்களைக் கற்கும் மாணவர்களின் தொகை என்றும் இல்லாதவாறு வீழ்ச்சி கண்டு வருகிறது. கலைத்துறையில் கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியில் கூடுதலாக செல்வதற்கு பேருதவியாக அமைந்த இப் பாடங்களைக் கற்றுக்கொள்ள ஊக்குவிப்பதில் சமீப காலத்தில் ஆசிரியர்கள் அக்கறை காட்டவில்லை. இதனால் பல்கலைக்கழகங்களில் இந்து நாகரிகத் துறையில் கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை மட்டுமல்ல, பொதுவாக கலைத்துறையில் பல்கலைக்கழகம் செல்லும் வடக்கு கிழக்கு மாணவர்களது தொகையும் குறைந்து வருவதையிட்டு பல்கலைக்கழக சமூகம் கவலை தெரிவித்து வருகிறது.*

*பௌத்த நாகரிகம் இலங்கையிலுள்ள சுமார் பதினொரு பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகின்றது. இவற்றைவிட, பௌத்தமத நிறுவனத்திற்குரிய கல்விப் பீடங்களிலும், கற்று பட்டம் பெறுகிறார்கள். இஸ்லாமிய நாகரிகம், இஸ்லாம் கற்கும் மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது. கிழக்கு பல்கலைக்கழகத்திலும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும், பேராதனை பல்கலைக்கழகத்திலும் இஸ்லாமிய மாணவர்கள் தமது சமய விடயங்களில் பட்டம் பெற்று வருவது நோக்கற்பாலது.*

*இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலங்கையிலும் மட்டுமே இந்து நாகரிகம், இந்து தத்துவம் தொடர்பான*

பட்டம்பெற வாய்ப்பு உண்டு. இவ்விரு பல்கலைக்கழகங்களிலும் இத்துறையில் பயிலும் மாணவர்களது எண்ணிக்கை குறைந்து செல்வது கவலைதரும் செய்தியாகும். இந்நிலையைப் போக்குவதற்கு சகல தமிழ்ப் பாடசாலைகளும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தவறின், இதனால் பாரிய விளைவுகள் ஏற்படலாம்.

சமீபத்தில் நல்லூரில் நடைபெற்ற அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுப் பேருரையின்போது பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பாக தனது உரையில் பெரிதும் கவலை தெரிவித்திருந்தார். யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையினரும், கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையினரும் இணைந்து தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சென்று இப் பாடங்களைக் கற்பதன் பயன்பற்றி நன்கு விளக்குதல் அவசியமாகும். இதுவிடயத்தில் இத்துறை சார்ந்தவர்களின் நடவடிக்கையோடு, சமய நிறுவனங்களின் அக்கறையும் அவசியம் தேவைப்படுகிறது.

## திருமுறைக்காவலர் சு. ஏழூர்நாயகம் மறைவு



**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் உறுப்பினரும், உப பொருளாளரும், அருள் ஒளி ஆன்மீக சஞ்சிகையின் உதவி ஆசிரியருமான திருமுறைக்காவலர் சு.ஏழூர்நாயகம் அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதியன்று காலமானார் என்பதை தேவஸ்தானம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றது.**

**அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும், இவரது குடும்பத்தினருக்கு தேவஸ்தானத்தின் ஆழ்ந்த அனுதாபங்கள்.**

நாட்டமென்றேஇரு! சற்குரு பாதத்தைநம்பு! பொம்மல்
ஆட்டமென்றேஇரு! பொல்லாஉடலை அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றேஇரு! சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென்றேஇரு! நெஞ்சே உனக்கு உபதேசம் இதே!

என்செயலாவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே!
உன்செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே!

**- பட்டினத்தார்**

ஓர் அஞ்சலிக் குறிப்பு

# திருமுறைக்காவலர், திருத்தொண்டர் அமரர் சு. ஏழூர்நாயகம் அவர்களை இனிமேல் சந்திப்பது எங்கே?

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சுமார் நாற்பது ஆண்டு காலமாக அருந்தொண்டாற்றிய திருமுறைக்காவலர், திருத்தொண்டர் உயர்திரு சு.ஏழூர்நாயகம் அவர்கள் 2019 பெப்ரவரி 13ஆம் திகதியன்று எம்மை விட்டுச் சென்றுவிட்டார். ஆலயப்பணி, அறப்பணி, திருமுறைப்பணி, சமூகப்பணி, வைத்தியசாலைப் பணி, ஓய்வூதிய சங்கப்பணி என ஓயாமல் உழைத்த சேவையாளன் விடைபெற்றுவிட்டார். புன்னகை பூத்த முகம், சிவந்த மேனி, எப்போதும் நெற்றியில் விபூதி, கழுத்தில் உருத்திராட்சம், மெல்லிய கரைவேட்டி அணிந்து, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எவ்வேளையும் திருத்தொண்டாற்றிய புண்ணிய ஆத்மா போய்ச் சேர்ந்துவிட்டது.

சைவப் பாரம்பரியம் காத்த சுந்தரமூர்த்தி தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்து, தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், பின் புகழ்பூத்த மகாஜனாக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றவர். மிகச் சிறிய வயதில் அரச நிறுவனமொன்றில் அலுவலராகப் பதவியேற்று, ஓய்வுபெறும் போது சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தராக விளங்கியவர்.

மகாஜனாக் கல்லூரியில் மாணவராகவிருந்த வேளையில் நாடக நடிகராக, பாடகராக பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றி கல்வி வாழ்வில் முத்திரை பதித்தவர். 1965ஆம் ஆண்டு சிரமதான இயக்கத்தில் இணைந்து, துர்க்கை அம்மன் திருப்பணியில் கால்எடுத்து வைத்தவர். பின், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் உருவாகியபோது, அதன் ஆரம்பகால உறுப்பினராக, தொடர்ந்து சங்கத்தின் தலைவராக, பேராளராக பல்வேறு பதவிகளை வகித்தவர். அன்னாரின் சிறந்த தொண்டுப்பணியை கௌரவிக்கும் வகையில், துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையில் இணைக்கப்பட்டார். நிர்வாக சபையின் உபபொருளாளராகத் தெரிவுசெய்யப்பட்ட இவர், இறையடி சேரும்வரை நீண்டகாலமாக தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பான பதவியிலிருந்து மிகப் புனிதமாகச் செயற்பட்டு வந்துள்ளார்.

இவர், முதல்நாள் செவ்வாய்க்கிழமை மதியவேளை, என்னோடு உரையாடிவிட்டு, வழமைபோல உண்டியல் பணத்தை சேகரித்து, சீராக கணக்கையும் பதிவுசெய்துவிட்டு, "தெல்லிப்பழை வைரவர் கோயிலில் பரணி அபிஷேகம், அங்கு கடமை செய்ய செல்கிறேன். நாளை வருவேன்" என்று இன்முகத்துடன் புறப்பட்டார். புதன்கிழமை காலை மாசி மாதப் பிறப்பு பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டுவிட்டு, தேவஸ்தான அலுவலகம் வந்தவேளை, ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஏழூர் அண்ணனின் மருகர் சட்டத்தரணி

காண்டீபன் அவர்கள் "மாமா நித்திரையில் போய்விட்டார்" என்று பெருங் கவலையோடு சொன்னார். அதிர்ந்து போய் விட்டேன். நம்ப முடியவில்லை.

எப்பொழுதுமே உற்சாகமாக இயங்கிய மனிதன் எப்படி உறக்கத்திலே உலகைவிட்டுப் போனார்? மூன்று நாட்களுக்கு முன்பு, நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சியை முன்வரிசையில் அமர்ந்திருந்து கேட்டு ரசித்தவர். நிகழ்ச்சி நிறைவுபெற்றதும் என்னை வாழ்த்தினார். இரவு எட்டு மணியாகிவிட்டது. "எப்படி பன்னாலைக்கு போகப் போறீர்கள்?" என்று ஆச்சரியமாகக் கேட்டேன். சிரித்துவிட்டு "சின்னமகள் வீட்டில் தங்கிவிட்டுப் போவேன், யோசிக்காதீர்கள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

இசையை, பேச்சை நன்றாக ரசித்து உண்மையான விமர்சனம் செய்யும் ஆற்றல் இவருக்கிருந்தது. திருமுறைகளில் நிறைந்த அனுபவம் இவருக்கு உண்டு. பல தேவார திருவாசகப் பாடல்களை மனனமாகப் பாடும் திறமை இவரிடம் காணப்பட்டது. பல வருடங்களாக ஆலயத்தில் திருவூஞ்சல் பாடுவது, திருவிழாகால திருமுறைகளை ஒழுங்குபடுத்துவது என்பன இவரது பொறுப்பில் இருந்தது. ஆலயத் தேர்த்திருவிழாவின் போது, இவரது தலைமையிலேயே திருமுறை மடத்து இசை நிகழ்ச்சிகள் இடம்பெறுவது வழக்கம். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள் இவர்மீது பற்று வைத்திருந்தவர். "தம்பி ஏழூர்" என்று அழைத்து இவரிடம் பொறுப்புக்களைக் கொடுப்பார். அன்னையின் மறைவின்போது அவரது வீட்டில் இரவு முழுவதும் தேவாரம் பாடினார். எவர் வீட்டு இறுதிக் கிரியையின் போதும் தானாக முன்வந்து திருமுறைப் பாடல்களைப் பாடுவார். எனது தாய், தந்தையரின் அந்திமக் கிரியைகளின்போது இவரே திருப்பொற்சுண்ணம் பாடினார்.

எங்கள் தேவஸ்தான விழாக்களில் பெரும்பாலும் இவரே வரவேற்புரை ஆற்றுவார். ஆண்டுதோறும் சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர்களது விபரங்களைத் திரட்டி, அவற்றை பதிப்பிக்கும் பணியை நிறைவேற்றுவார். தேவஸ்தான வெளியீடான அருள்ஒளி ஆன்மீக சஞ்சிகையின் உதவி ஆசிரியராக உன்னத பணியாற்றி வந்தவர். தினமும் தவறாது தேவஸ்தானத்திற்கு வருகைதந்து தனக்குரிய கடமைகளை தவறாது செய்தவர். எந்தவொரு அழைப்பிதழ் கிடைத்தாலும் அதற்குரிய மதிப்புக்கொடுத்து வந்தவர். வீண் வார்த்தை பேசமாட்டார். என்னைப் பொறுத்தவரை, என்னோடு உடன்பிறந்த சகோதரன் போன்று, என்மீது அளவற்ற பற்று கொண்டவர்.

இவரது நினைவுகள் என்னை விட்டு என்றும் அகலாது. துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு இவரது பிரிவு, ஈடுசெய்ய முடியாத இழப்பு. மூன்று புதிய கோபுரங்கள் அமைக்கப்பட்ட வேளையில் அவற்றின் திருக்கதவு திறப்பதற்கு இவரே திருமுறை பாடியவர். அதனை, தனக்கு வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகவே சொல்லி மகிழ்ந்தார். நோயில் கிடந்து அழுந்தாமல், நொந்து மனம் வாடாமல், உறக்கத்திலேயே இந்த உத்தம மனிதனை அம்பாள் அழைத்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா துர்க்கை அம்பாளின் திருவடியில் நிம்மதிபெற பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

# அமரர் சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம் அவர்களுக்கு அஞ்சலி

நா.தவநாதன், செயலாளர் நிர்வாகசபை, ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

திரு.சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம் அவர்கள், பன்னாலை கதிரிப்பிள்ளை சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் சரஸ்வதி அம்மையாருக்கும் இளைய மகனாக 1941ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி பிறந்தார்.

அவர் தமது ஆரம்ப கல்வியை தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் க.பொ.த உயர்தரக் கல்வியைக் கற்றார். அரச திணைக்கள சேவைக்கு விண்ணப்பித்து அரச எழுதுவினைஞர் தரம் மூன்று போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகப் பரீட்சையிலும் தெரிவானார். முதல் நியமனமாக பதுளை மாவட்டத்திலும் அதன்பின் கொழும்பு மாவட்டத்திலும் பணியாற்றினார். இறுதியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிர்வாக உத்தியோகத்தராக பதவி உயர்வுபெற்று பணியாற்றினார்.அறுபதாவது வயதில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற பின்னரும் சில வருடங்கள் சாந்தியகம் நிறுவனத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றினார்.

தனது இளமைப் பராயத்தில் தெல்லிப்பழை கிழக்கு குருநாதர்சுவாமி ஆலயம், தெல்லிப்பழை கிழக்கு காசி விநாயகர் ஆலயம், தெல்லிப்பழை கிழக்கு ஆலடி வைரவர் ஆலயங்களில் தொண்டர் சபை உறுப்பினராக சேர்ந்து பஜனைக்குழு, புராணபடிப்பு மற்றும் திருமுறை ஓதல் ஆகியவற்றில் பங்குபற்றி அந்த ஆலயங்களின் வளர்ச்சியிலும் ஈடுபட்டு உழைத்தவர். குறிப்பாக தெல்லிப்பழை கிழக்கு ஆலடி வைரவர் திருப்பணிச் சபையின் பொருளாளராக பதவியேற்று குறுகிய காலத்தில் ஆலயத்தை புனரமைப்பு செய்வித்து, அந்த ஆலய கும்பாபிஷேகத்தை 09.06.2016இல் நிறைவேற்ற பெரிதும் பாடுபட்டார்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் 1966இல் ஆரம்பித்த காலத்தில் அதன் அங்கத்தவராக சேர்ந்து அச்சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளை வகித்து அதன் வளர்ச்சியிலும், துர்க்காதேவி தேவஸ்தான பணிகளிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவந்தார். இவரின் செயற் திறமையினை அவதானித்த தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் தேவஸ்தான நிர்வாக சபை அமைப்பு திட்ட விதிகளின் பிரகாரம் 17.04.1989இல் இவரை தேவஸ்தான உப பொருளாளராக நியமித்தார். அக்காலம் தொடக்கம் அவர் தமக்கு பணிக்கப்பட்ட தேவஸ்தான கடமைகளை சிறப்புடன் ஆற்றிவந்தார். ஒவ்வொருநாளும் தேவஸ்தானத்திற்கு வருகைதந்து வரவு செலவு கணக்குகளை பேரேடுகளுடன் ஒப்பிட்டு சரிபார்த்தும், செவ்வாய்தோறும் ஆலய உண்டியல்களில் சேகரிக்கப்படும் பணத்தை கணக்கிட்டும் பணியை செவ்வனே ஆற்றி வந்தார்.

தேவஸ்தான வருடாந்த மகோற்சவ காலங்களிலும் வசந்த மண்டபப் பூசைகளின்போதும் பஞ்சபுராணங்கள் ஒழுங்காக ஓதக்கூடிய தகுதியானவர்களை

தெரிவு செய்து சிறப்பாக நிறைவேற வழிவகுத்தார். மேலும் மகோற்சவ காலத்தில் முதல்நாள் கொடியேற்றத்தின் போது கொடிக்கவி மற்றும் அட்ட திக்குகளுக்கு உரித்தான திருமுறைகளை ஓதுவதும், வசந்த மண்டபத்தில் திருப்பொன்னூஞ்சல் பாடுவதும் இவரின் பொறுப்பாக இருந்தது. மேலும் தேவஸ்தானத்தின் மாதாந்த வெளியீடான 'அருள்ஒளி' சஞ்சிகைக்கு உதவி ஆசிரியராக இருந்து ஆக்கங்களைப் பெற்று தொகுத்து உரிய காலத்தில் வெளியீடு செய்துவந்தார்.

வருடந்தோறும் ஜனவரி 7ஆம் திகதி நடைபெறுகின்ற சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் பிறந்த நாள் அறக்கொடை விழாவின் போது "சிவத்தமிழ் விருது" பெறும் சான்றோர்கள் பற்றிய விபரங்களை திரட்டி தொகுத்து விழாவில் வெளியீடு செய்தும், வருடந்தோறும் ஆனி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தன்று நடைபெறுகின்ற சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் குருபூசையின் போது கௌரவம் பெறும் மூத்த சிவாச்சாரியார்களின் விபரங்களை திரட்டித் தொகுத்து குருபூசை தினத்தில் வெளியீடும் செய்துவந்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டு பல வருடங்களாக இயங்காததை அவதானித்த யாழ்ப்பாண அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைய, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் மூன்று பேரைக் கொண்ட குழுவை நியமித்தார். அக்குழுவின் செயலாளராக அமரர் ஏழூர்நாயகம் அவர்கள் நியமனம் பெற்றார். அக்குழுவானது ஒருவருட காலத்தில் அங்கத்தவர்களை சேர்த்து பொதுச்சபையினைக் கூட்டி புதிய நிர்வாக சபையினை தெரிவுசெய்து, வைத்தியசாலைச் சங்கம் இயங்க வழிவகுத்தது. இவர் வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலை நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகத்திலும் இணைந்திருந்து அவற்றின் வளர்ச்சியிலும் பங்கு கொண்டார்.

வழமைபோல் 12.02.2019 செவ்வாய்க்கிழமை தேவஸ்தானத்திற்கு வருகைதந்து தமது கடமையினை சரிவர ஆற்றிய பின் மாலை வீடு திரும்பினார். அடுத்த நாள் 13.02.2019 புதன்கிழமை அதிகாலை அவர் இறந்துவிட்டார் என்ற துயரச் செய்தி எமக்கு தெரியவந்தது. இச்செய்தியினை கேள்வியுற்ற தேவஸ்தான நிர்வாகம் அதிர்ச்சியடைந்தது. தேவஸ்தானம் ஒரு சிறந்த நிர்வாகியை இழந்துவிட்டது. 14.02.2019 வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியையில் தேவஸ்தான சமூகம் நேரில் சென்று அஞ்சலியைச் செலுத்தியது.

அவரின் மறைவினால் கவலையுறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்களுக்கு தேவஸ்தானத்தின் சார்பில் அஞ்சலியை செலுத்துகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

# மகா சிவராத்திரி மகிமையும் சிறப்பும்

எஸ்.கண்ணன் கோபாலன்



அம்பாள் வழிபாட்டுக்கு உகந்தவை நவராத்திரிகள் என்றால், அரனாருக்கு உகந்தது ஒரு ராத்திரி: அதுவே மகிமைகள் பல கொண்ட புண்ணிய சிவராத்திரி. 'சிவம் என்றால் மங்கலம் என்று பொருள்'. ஆக, சர்வ மங்கலங்களையும் அருளும் அற்புதமான திருநாள், 'சிவராத்திரி' என்பார்கள் பெரியோர்கள். இப்படி சீரும் சிறப்பும் மிகுந்த சிவராத்திரி குறித்து நாமும் விரிவாக அறிந்துகொள்வோமா?

பொதுவாக பதினைந்து திதிகளில் பதினான்காவது திதிக்கு அதிபதி ஸ்ரீருத்ரன் ஆவார். அந்த ருத்ரனின் ராத்திரியே சிவராத்திரி ஆகும். அதாவது சதுர்த்தசி திதி நாளே சிவராத்திரி ஆகும். இந்த தினத்தில் சிவபெருமானை வழிபடுவதால், விசேஷ பலன்கள் கைகூடும்.

சதுர்த்தசி திதி, மாதம் இருமுறை வரும். இந்த இரண்டில் தேய்பிறை சதுர்த்தசி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதிநாளுக்குக் கூடுதல் மகத்துவம் உண்டு. அந்தத் திருநாளையே நாம் மகா சிவராத்திரி புண்ணிய தினமாகக் கொண்டாடுகிறோம். இந்தத் திருநாளுக்கு அப்படியென்ன மகத்துவம்? இதுபற்றி புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

**உமையவள் செய்த வழிபாடு**

ஒருமுறை பிரளயம் ஏற்பட்டு, படைப்புகள் அனைத்தும் சிவபெருமானுக்குள் ஒடுங்கின. அண்டபகிரண்டத்தையும் இருள் சூழ்ந்த அந்த வேளையில், பார்வதிதேவி நான்கு காலம் சிவபெருமானை வழிபட்டாள்.

மேலும், தன்னைப் போன்று சிவராத்திரி அன்று சிவனாரைப் பூஜிப்பவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் அருள வேண்டும் என்றும் சிவனாரிடம் வேண்டிக்கொண்டாள் உமையவள். சிவபெருமானும் 'அப்படியே ஆகட்டும்' என்று அருள்பாலித்தார். இப்படி பார்வதிதேவி தொடங்கிய சிவராத்திரி புண்ணிய வழிபாடு இன்றைக்கும் தொடர்கிறது.

**கண்களை மூடினாள்..... உலகம் இருண்டது!**

ஒருமுறை பார்வதிதேவியார் விளையாட்டாகக் கருதி சிவபெருமானின் கண்களைப் பொத்தினாள். ஆகவே, உலகம் இருளால் சூழப்பட்டது. இதனால் உயிர்கள் யாவும் கலங்கித் தவித்தன. அப்போது ருத்திரர்கள் ஒன்றுசேர்ந்து,

உலகின் இன்னல் நீங்க சிவபெருமானை அர்ச்சித்து வழிபட்டனர். அதன் நினைவாகவே சிவராத்திரி அனுஷ்டிக்கப்படுவதாகச் சொல்வார்கள்.

இது தொடர்பாக இன்னொரு கதையையும் சொல்வார்கள். பார்வதி தேவியார், சிவனாரின் கண்களைப் பொத்தியதும், அவர் தம்முடைய நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதனால் உண்டான வெம்மையைத் தாங்க முடியாமல் உலகம் தவித்தது. உடனே பார்வதிதேவியார் சிவனாரை தொழுது பணிந்தாள். அதனால் மகிழ்ந்த சிவனாரும் தம் நெற்றிக்கண்ணால் உண்டான சுடர் ஒளியை குளிர்ச்சி பொருந்தியதாகத் திகழும்படி அருள்செய்தார். இப்படி, பார்வதிதேவி பூஜித்ததும் சிவனார் அருளியதுமான அந்தத் திருநாளே புண்ணியமிகு சிவராத்திரி என்பர்.

### பாற்கடலும் சிவராத்திரியும்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த திருக்கதை தெரியும் அல்லவா? அப்போது பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை அருந்திய சிவனார், மயங்கிக் கிடப்பது போல் அருளாடல் புரிந்து, பிறகு சந்தியாகாலத்தில் ஆனந்த தாண்டவமும் புரிந்தார். இது நிகழ்ந்தது ஒரு திரயோதசி தினத்தில். தொடர்ந்து சதுர்த்தசி அன்று இரவு நான்கு ஜாமங்களிலும் தேவர்கள் அவரை வழிபட்டு துதித்தார்கள். இதுவே சிவராத்திரி என்றும் சில பெரியோர்கள் கூறுவார்கள்.

### அடி - முடி தேடிய திருக்கதை!

பெரும்பாலும் இந்தத் திருக்கதையையே சிவராத்திரிக்கான காரணக் கதையாகச் சொல்வார்கள். ஒருமுறை, மகாவிஷ்ணுவுக்கும் பிரம்மனுக்கும் இடையே, 'யார் பெரியவர்' என்று வாக்குவாதம் தொடங்கி, அது சண்டையாகவே உருமாறியது. அந்தப் போர் முடிவில்லாமல் தொடர்ந்தது. அடுத்து என்னவாகுமோ என்று தேவர்கள் கலங்கினார்கள். இந்நிலையில், இருவருக்கும் இடையே ஒளி பொருந்திய பெரியதொரு நெருப்புத் தூணாக நின்றார் சிவபெருமான். அந்தத் தூணின் பிரகாசத்தைக் கண்ட இருவரும் வியந்தனர்.

அப்போது திருமால், பிரம்மனை நோக்கி, "நமக்கு இடையில் அதிமகிமை பொருந்திய மூன்றாவது ஒருவரும் இருக்கிறார். அவராலேயே இது உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இதன் அடியையும் முடியையும் முதலில் அறிவோம்" என்றார். பிரம்மனும் ஒப்புக்கொண்டார். உடனே, திருமால் வலிய கொம்புகளுடைய வராஹ அவதாரம் எடுத்து, பூமியை அகழ்ந்து சென்று அதன் மூலத்தைக் காண முயன்றார். பிரம்மன் அன்னத்தின் வடிவம் எடுத்து உச்சியைக் காணச் சென்றார்.

ஆண்டுகள் பலவாயின. அவர்களால் எதையும் காணமுடியவில்லை. அவர்களின் உடலும் உள்ளமும் சோர்ந்துபோயின. ஆகவே, இருவரும் தங்களின் தோல்வியை ஒப்புக்கொண்டு பழையபடி பூமியை அடைந்தனர். இருவரும் நெருப்புத் தூணின் இருபுறமும் நின்று, சிவபெருமானைப் போற்றித் துதித்தனர். அவர்களோடு சேர்ந்து தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானின் எல்லையில்லாச் சிறப்புக்களைப் போற்றிப் பாடியும், ஆடியும் நெஞ்சு நெகிழ்ந்து பலவாறு துதி செய்தனர்.

அதைத் தொடர்ந்து, அந்த நெருப்புத் தூணின் மையத்தில் மான், மழு, அபய, வரத முத்திரைகளைத் தாங்கியவராகத் தோன்றினார் சிவபெருமான். அவர் மகாவிஷ்ணுவையும், பிரம்மனையும் நோக்கி, "வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்றார். அவர்கள் இருவரும் அவரை வணங்கித் தொழுததுடன், தங்களின் படைத்துக் காக்கும் தொழில் ஞானம் பழையபடியே பொலிவுடன் திகழ அருளும்படியும், போரில் வெந்து அழிந்து போன தங்களுடைய ஆயுதங்களை மீண்டும் தர வேண்டுமென்றும் வேண்டினர்.

அப்படியே அருள்பாலித்த சிவனார், "அன்பர்களே! இன்று நான் உங்கள் முன்னே தோன்றி அருள்பாலித்த நாள் சிவராத்திரியாகும். இதுபோல் முன்னம் ஒரு சிவராத்திரி நாளில் தேவியும் என்னை அர்ச்சித்துப் பேறுபெற்றாள். இந்நாளில் ஆகமங்களில் கூறியுள்ளபடி பூசை செய்தால் நினைத்த நல்லவை யாவும் நடக்கும்." என்று அருள் புரிந்து மறைந்தார்.

இந்த திருக்கதையை சிவமகா புராணம் பூர்வபாகம், உபமன்யு பக்தவிலாசம், மகா ஸ்காந்தம், நாரதம், லிங்க புராணம் ஆகிய ஞானநூல்கள் சிற்சில மாறுதலுடன் விரிவாக விளக்குகின்றன. தமிழில் கந்தபுராணம், அருணகிரிபுராணம், சிவராத்திரி புராணம், அருணாசல புராணம் ஆகியவற்றிலும் இந்தத் திருக்கதையைக் காணலாம். இக்கதையையொட்டியே, பிரம்மனுக்காக தாழம்பூ பொய்யுரைத்து சாபம் பெற்ற கதையும் கூறப்படுவது உண்டு. பின்னர், தாழம்பூ தனது தவறை உணர்ந்து சிவனாரிடம் விமோசனம் கேட்க, சிவராத்திரி அன்று மட்டும் தமக்கான பூஜையில் தாழம்பூ இடம்பெறும் என்று சிவனார் அருள்புரிந்ததாகவும் ஒரு திருக்கதை உண்டு.

சிவராத்திரி வழிபாடு தோன்றியதற்கான காரணக் கதைகளைப் படித்தறிந்தோம். இனி, சிவராத்திரியின் வகைகள் மற்றும் சிவராத்திரி வழிபாடு குறித்து விரிவாகத் தெரிந்துகொள்வோம்.

**சிவராத்திரியின் வகைகள்**

சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை: நித்ய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாக சிவராத்திரி.

**நித்ய சிவராத்திரி :** வருடத்தின் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை மற்றும் வளர்பிறைகளில், சதுர்த்தசி திதி இடம்பெறும் நாட்களில் வரும் இரவுகள் நித்ய சிவராத்திரி ஆகும். அதேபோல், இனமும் இரவு அர்த்தஜாம பூஜை நடைபெறும் காலத்தையும் நித்ய சிவராத்திரி என்று சொல்வது உண்டு.

**மாத சிவராத்திரி :** ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு திதிகளை ஒட்டி அனுஷ்டிக்கப்படுவது, மாத சிவராத்திரி ஆகும். இந்த மாத சிவராத்திரி, மாதத்தின் மற்ற திதிகளிலும் வரும். அந்த விபரமும், குறிப்பிட்ட அந்த தினங்களில் வழிபட்டு சிவனருள் பெற்றவர்களின் பட்டியலும் வருமாறு:

| | | |
|---|---|---|
| சித்திரை | – | தேய்பிறை அஷ்டமி. இந்த தினத்தில் உமாதேவியார் வழிபட்டு அருள்பெற்றார். |
| வைகாசி | – | வளர்பிறை அஷ்டமி , சூரியன். |
| ஆனி | – | வளர்பிறை சதுர்த்தசி , ஈசானன். |
| ஆடி | – | தேய்பிறை பஞ்சமி, முருகன். |
| ஆவணி | – | வளர்பிறை அஷ்டமி, சந்திரன். |
| புரட்டாதி | – | வளர்பிறை திரயோதசி, ஆதிசேஷன். |
| ஐப்பசி | – | வளர்பிறை துவாதசி, இந்திரன். |
| கார்த்திகை | – | வளர்பிறை சப்தமி மற்றும் தேய்பிறை அஷ்டமி, சரஸ்வதி, |
| மார்கழி | – | வளர்பிறை சதுர்த்தசி மற்றும் தேய்பிறை சதுர்த்தசி, லட்சுமி. |
| தை | – | வளர்பிறை திரிதியை, நந்தி. |
| மாசி | – | தேய்பிறை சதுர்த்தசி, தேவர்கள். |
| பங்குனி | – | வளர்பிறை திரிதியை, குபேரன். |

**பட்ச சிவராத்திரி :** தை மாதத் தேய்பிறை பிரதமை அன்று தொடங்கி, தொடர்ந்து பதின்மூன்று நாட்கள் தினந்தோறும் முறைப்படி ஒருவேளை உணவு உண்டு, பதினான்காம் நாளான சதுர்த்தசி அன்று முறைப்படி விரதம் இருப்பது பட்ச சிவராத்திரி எனப்படும்.

**யோக சிவராத்திரி :** யோக சிவராத்திரியில் நான்கு வகை உண்டு. அதன் விபரம்:

1. திங்கட்கிழமையன்று சூரிய உதயம் முதல் இரவு முழுவதும். அதாவது பகல் – இரவு சேர்ந்த அறுபது நாழிகையும் (24 மணி) அமாவாசை இருந்தால் அது யோக சிவராத்திரி.
2. திங்களன்று சூரிய அஸ்தமனம் முதல் செவ்வாய்க்கிழமை காலை வரை தேய்பிறை சதுர்த்தசி இருப்பதும் யோக சிவராத்திரி ஆகும்.
3. திங்கட்கிழமையன்று இரவின் நான்காம் ஜாமத்தில் (இரவு 3மணி முதல் 6மணி வரை) அரை நாழிகைப் பொழுது அமாவாசை இருந்தாலும் அது யோக சிவராத்திரி ஆகும்.

4. திங்கட்கிழமையன்று இரவின் நான்காம் ஜாமத்தில் தேய்பிறை சதுர்த்தசி திதி அரை நாழிகை (12 நிமிடங்கள்) இருப்பதும் யோக சிவராத்திரி.

இந்த நான்கு 'யோக' சிவராத்திரிகளில், ஏதாவது ஒரு யோக சிவராத்திரியன்று விரதம் இருந்தாலும் அதற்கு மூன்று கோடி சிவராத்திரி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்பது சாஸ்திரம்.

**மாக சிவராத்திரி :** மாசி மாதம் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளே 'மாக சிவராத்திரி. இதையே மகா சிவராத்திரியாகப் போற்றிக் கொண்டாடுகிறோம்.

'ராத்திர' என்ற சொல்லுக்கு யாவும் செயலற்று ஒடுங்குதல் என்று பொருள். அதாவது, உயிர்கள் செயலற்று சிவபெருமானுக்குள் ஒடுங்கும் காலமே சிவராத்திரி. ஆகவே, இந்த புண்ணிய காலத்தில் சிவநாமம் சொல்லி, நான்கு கால பூஜைகள் செய்து வழிபடுவது விசேஷம். இதனால், இம்மையில் சுகானந்த வாழ்வையும், மறுமையில் சுகப் பேரானந்த வாழ்வையும் பெற்றுச் சிறக்கலாம்.

இனி, மகிமைகள்மிகு மகாசிவராத்திரி புண்ணிய தினத்தில், சிவனாரை வழிபடுவதற்கு உரிய நியதிகள் மற்றும் விரத தாத்பர்யங்கள் குறித்து விளக்கமாக அறிவோமா?

**மகா சிவராத்திரி வழிபாடு!**

சிவராத்திரிக்கு முதல் நாளன்று ஒருவேளை உணவு உண்டு, சுகபோகங்கள் அனைத்தையும் தவிர்க்க வேண்டும். மறுநாள் சிவராத்திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதிக்கும்போது காலையில் செய்ய வேண்டிய அனுஷ்டானங்களை (பூஜைகள் போன்றவற்றை) செய்த பிறகு, சிவாலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்து திரும்ப வேண்டும். சிவாலய தரிசனம் முடிந்து வீட்டுக்கு வந்தவுடன், அங்கு சிவராத்திரி பூஜைக்கு உரிய இடத்தைச் சுத்தம் செய்து, மாலை, தோரணங்கள் ஆகியவற்றால் அலங்காரம் செய்ய வேண்டும்.

அதன் பின் நடுப்பகலில் நீராடி, உச்சிக் கால அனுஷ்டானங்களை முடித்துவிட்டு சிவபூஜைக்கு உரிய பொருட்களைச் சேகரித்து, சூரியன் மறையும் வேளையில் சிவன் கோயிலில் கொண்டுபோய்க் கொடுத்து, சிவராத்திரி பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வீடு திரும்பியதும் மறுபடியும் நீராடி, மாலை நேர அனுஷ்டானங்களை முடித்துவிட்டு, ஏற்கெனவே தூய்மை செய்து அலங்கரிக்கப்பட்ட இடத்தில் ஓர் உயர்ந்த பீடத்தில் பரமேஸ்வரனை (சிவலிங்கத்தை) வைத்து நான்கு

ஜாமங்களிலும் பூஜை செய்ய வேண்டும் அல்லது சிவாலயங்களில் நடைபெறும் நான்கு கால பூஜைகளில் கலந்துகொண்டும் சிவனருள் பெறலாம்.

சிவராத்திரி புண்ணிய தினத்தில் அனைத்து சிவாலயங்களிலும் நான்கு கால பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறும். ஒவ்வொரு கால பூஜைக்கும் சில குறிப்பிட்ட நியதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு காலத்துக்கும் உண்டான நியதிகளைப் பற்றிப் பார்ப்போம்.

**முதல் காலம்**

முதல் காலத்தில் சிவபெருமானுக்கு அனைத்து விதமான திரவியங்களாலும் அபிஷேகம் செய்யவேண்டும். பொதுவாக, சிவராத்திரி புண்ணிய தினத்தன்று நான்குகால பூஜை வேளையிலும், அனைத்துவிதமான திரவியங்களால் அபிஷேகம் செய்யவேண்டும் என்பது சாஸ்திரம். ஆனாலும், ஒவ்வொரு காலத்துக்கும் ஓர் அபிஷேகம் விசேஷமாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் முதல் காலத்தில் விசேஷமான திரவியமாக சொல்லப்பட்டு இருப்பது பஞ்சகவ்யம். இந்த பஞ்சகவ்யத்தை தயாரிப்பது பற்றியும் சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

'பஞ்சகவ்யம்' என்பது பசுவிலிருந்து பெறப்பட்ட ஐந்து பொருட்களைக் குறிப்பது ஆகும். பால், தயிர் நெய், கோமியம், பசுஞ்சாணம் ஆகிய ஐந்தையும் முறைப்படி ஒவ்வொரு படி எடுத்துக்கொள்ளவும். பிறகு நடுவில் பசுவின் பாலையும், அதன் கிழக்கே தயிரையும், தெற்கே நெய்யையும், வடக்கே கோமியத்தையும், மேற்கே பசுவின் சாணத்தையும் வைத்து, முறைப்படி நடுவே ஈசானன், கிழக்கே தத்புருஷன், தெற்கே அகோரன், வடக்கே வாமதேவன், மேற்கே சத்யோஜாதன் என்பதாக இறைவனின் ஐந்து நாமாக்களையும் கூறி பூஜிக்கவேண்டும். பின்னர் பசுவின் சாணத்தை எடுத்து கோமியத்தில் இட வேண்டும். அடுத்து இந்தக் கலவையை பசுநெய்யில் சேர்க்கவேண்டும். பிறகு, இந்த மூன்றும் சேர்ந்த கலவையை பசுந் தயிருடனும் கலந்தபிறகு, நிறைவாக அனைத்தையும் பசும்பாலில் கலந்துகொள்ளவேண்டும். இப்படி பஞ்சகவ்யம் தயாரிக்கும்போது, ஒவ்வொன்றுக்கும் உரிய மந்திரம் சொல்லி கலக்கவேண்டும். தெரியாதவர்கள், ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்தபடி பஞ்சகவ்யம் தயார் செய்யலாம். பஞ்சகவ்யம் தயாரானதும், அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து, அந்த பொருளை பூஜிக்கப்பட்ட ஒரு விசேஷத் திரவியமாகக் கொள்ள வேண்டும். இந்த பஞ்சகவ்யம் அபிஷேக திரவியங்களுள் ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

இந்த பஞ்சகவ்யத்தை நாம் வெவ்வேறு வண்ண பசுக்களிடமிருந்து பெற வேண்டும். பால் சிவப்புநிற பசுவிலிருந்தும், தயிரானது வெண்மை நிற பசுவிலிருந்தும், நெய்யானது சாம்பல் நிற பசுவிலிருந்தும், கோமியம் கறுப்பு நிற

பசுவிலிருந்தும், பசுஞ்சாணம் பலவர்ணமுடைய பசுவிலிருந்தும் பெறப்பட வேண்டும். ஒருவேளை அப்படி கிடைக்காவிடில், அனைத்தையும் கறுப்பு வண்ண பசுமாட்டிலிருந்து இவற்றைப் பெறலாம்.

முதல் கால அபிஷேகம் முடிந்ததும் ஸ்வாமியின் திருமேனியில் சந்தனம், தேன் கலந்து தடவவேண்டும். முதல் காலத்துக்கு உரிய விசேஷ அபிஷேகப் பொருளாக பஞ்சகவ்யம் திகழ்வதுபோன்று, விசேஷ பூக்கள், வஸ்திரம், நைவேத்தியம் முதலானவை குறித்தும் ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவை:

| | | |
|---|---|---|
| வஸ்திரம் | : | சிவப்பு வண்ண பட்டு |
| மாலை | : | வில்வம் |
| தூபம் | : | சந்தனக் கட்டைளைத் தூள் செய்து தூபம் போடவேண்டும். |
| தீபம் | : | விளக்கெண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றலாம். |
| நைவேத்தியம் | : | பருப்பும் நெய்யும் சேர்த்த அன்னம். |
| பாராயணம் | : | ரிக்வேதம் மற்றும் சிவபுராணம் |

**இரண்டாவது காலம்**

இரண்டாவது ஜாமத்தில் அனைத்துவித திரவியங்களால் அபிஷேகம் செய்வதுடன், விசேஷ திரவியமாக பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்யவேண்டும். இதில் இரண்டு வகை உண்டு. ஒன்று ரச பஞ்சாமிர்தம், மற்றொன்று பழ பஞ்சாமிர்தம். நாம் பார்க்கின்ற இந்த சிவராத்திரியிலே இரண்டாவது காலத்திலே சொல்லப்படுகிற பஞ்சாமிர்தம் ரச பஞ்சாமிர்தம். ரசம் என்றால் திரவநிலை.

சிவப்பு பசுவிலிருந்து பெறப்பட்ட பாலை நடுவில் வைக்கவேண்டும். பின்னர், வெள்ளை பசுவின் பாலில் உருவான தயிரை கிழக்கிலும், சாம்பல் பசுவின் பாலில் பெறப்பட்ட நெய்யை தெற்கிலும், அச்சுவெல்லம் அல்லது தூள்ச் சர்க்கரையை வடக்கிலும், தேனை மேற்கிலும் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு முன்னர் சொன்னதுபோன்று சிவமந்திரம் அல்லது சிவநாமம் சொல்லி பூஜித்து அவற்றை கலந்துகொள்ளவேண்டும். இந்தக் கலவைக்கே ரச பஞ்சாமிர்தம் என்று பெயர். இயலாவிடின், ஐவகை பழங்களைக் கொண்டு பழ பஞ்சாமிர்தத்தால் அபிஷேகித்தும் வழிபடலாம்.

இரண்டாம் கால அபிஷேகம் முடிந்ததும், பச்சைக் கற்பூரம் அரைத்து சுவாமியின் திருமேனியில் பூசவேண்டும்.

| | | |
|---|---|---|
| வஸ்திரம் | : | மஞ்சள் வண்ண வஸ்திரம். |
| மாலை | : | குருந்த மர இலைகளால் ஆன மாலை. துளசியால் அர்ச்சனை செய்யலாம். |

தூபம் : சாம்பிராணியும் குங்கிலியமும் கலந்து தூபம் இடவேண்டும்.
தீபம் : இலுப்பை எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றலாம்.
நைவேத்தியம் : பாயாசம்
பாராயணம் : யஜுர் வேத பாராயணமும் எட்டாம் திருமுறையில் கீர்த்தித் திருவகவலும் பாராயணம் செய்யவேண்டும்

**மூன்றாம் காலம்**

மூன்றாம் ஜாமத்தில் அதாவது காலத்தில், சிவபெருமானுக்கு அனைத்துவிதமான திரவியங்களுடன், விசேஷமாக தேனபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகம் முடிந்ததும், கஸ்தூரி சேர்த்த சந்தனத்தை ஸ்வாமிக்குப் பூச வேண்டும்.

வஸ்திரம் : வெள்ளை வஸ்திரம்.
மாலை : கிலுவை இலை மற்றும் விளா இலைகளால் தொடுக்கப்பட்ட மாலையும் ஜாதி முல்லை மாலையும் மூன்றுதள வில்வத்தால் அர்ச்சிக்க வேண்டும்.
தூபம் : குங்கிலிக பூவினால் தூபம் போடவேண்டும்
தீபம் : நெய் தீபம் ஏற்றி வழிபடலாம்.
நைவேத்தியம்: மாதுளை, எள் அன்னம்.
பாராயணம் : சாமவேதம் பாராயணம் செய்வதுடன், எட்டாவது திருமுறையில் திருவண்டகப் பகுதி பாராயணம் செய்யவேண்டும்.

**நான்காம் காலம்**

நான்காம் கால பூஜையின்போது, கரும்புச்சாறு அபிஷேகம் செய்யவேண்டும். புனுகு, சந்தனம் சேர்த்துப் பூசவேண்டும்.

வஸ்திரம் : பச்சை அல்லது நீலவண்ண வஸ்திரம்.
மாலை : கருநொச்சியினால் அலங்காரம் செய்து, வெள்ளை நந்தியாவட்டையால் ஆன மாலையை அணிவிக்கவேண்டும். மேலும் நிறைய புஷ்பங்களால் அலங்கரிக்கவேண்டும்.
தூபம் : கற்பூரம் மற்றும் லவங்கப்பட்டையைப் பொடி செய்து தூபம் போடவேண்டும்.
தீபம் : நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடலாம்.
நைவேத்தியம் : வாழை முதலான அனைத்துவகைப் பழங்களும், சர்க்கரைப் பொங்கலும் படைக்கலாம்.
பாராயணம் : அதர்வண வேதம் பாராயணம் செய்வதுடன், எட்டாம் திருமுறையில் போற்றித் திருவகவல் பாராயணம் செய்யவேண்டும்.

**ஐந்தெழுத்து மகிமை!**

சிவபெருமானை நாள்தோறும் திருவைந்தெழுத்து ஜபித்து வழிபட வேண்டும் என்பது சாஸ்திரம். முறைப்படி தீட்சை பெற்றவர்கள் மட்டுமே திருவைந்தெழுத்து ஜபிக்க முடியும். ஆனால், சிவராத்திரி அன்று மட்டும் முறைப்படி தீட்சை பெறாதவர்களும் பஞ்சாட்சரத்தையோ அல்லது காரண பஞ்சாட்சரத்தையோ ஜபித்து சிவபெருமானை வழிபடலாம்.

நமசிவாய எனும் திருவைந்தெழுத்தில், 'சிவ' என்ற இரண்டு எழுத்து காரண பஞ்சாட்சரமாகும். இந்த இரண்டு எழுத்தைச் சொன்னாலும் நமக்கு சிவபெருமானின் அருள் கிடைக்கும். ஐந்தெழுத்தைச் சொல்லும்போது, 'ஓம்' என்ற பிரணவத்தை முதலிலும், நம' என்ற போற்றும் பதத்தை நிறைவிலும் சேர்ப்போம். ஆனால், 'சிவ' என்று உச்சரிக்கும்போது அவை பரிபூரணமாகக் கிடைக்கும் என்பார்கள் பெரியோர்கள்.

உதாரணத்துக்கு குழந்தை பசியால் அழுகிறது. அதற்கு நாம், 'பசி வந்துவிட்டது குழந்தை அழுகிறது' என்கிறோம். அப்படி சொல்லும்போது 'பசி' என்ற சொல்லின் இறுதி எழுத்தும், விலகிப்போகின்றனவாம்.

திருமூலரும் 'சிவ சிவ என்கிலர் தீவினையாளர்' என்று சொல்லி இருக்கிறார். நாமும், எப்போதும் சிவநாமம் கூறி சிவனருள் பெறுவோம்.

**மகிமையைச் சொல்லும் திருக்கதை!**

அங்குலன் என்றொரு வேடன் இருந்தான். தரையில் மட்டுமின்றி விருட்சங்களிலும் வலைவிரித்து விலங்குகளைப் பிடிப்பதில் வல்லவன் அவன். அழகான மனைவி, அறிவுமிகுந்த குழந்தைகள் என அமைதியாக சென்றது, அங்குலனின் வாழ்க்கை.

ஒருநாள் அங்குலன் தனது வழக்கப்படி வலைகளை விரித்து விட்டுக் காத்திருந்தான். பறவைகளோ விலங்குகளோ எதுவும் அவற்றில் சிக்கவில்லை. சின்னஞ்சிறிய அணில்கூடச் சிக்கவில்லை. அங்குலன் வருந்தினான். அவன் வருத்தத்தை மேலும் அதிகமாக்குவது போல, சூரியனும் மறையத் தொடங்கினான். ஆனாலும் வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்ப மனம் இல்லாத அங்குலன், 'இன்று இரவு இங்கேயே தங்கி, நாளைக்கு ஏதாவது கொண்டுபோக வேண்டும்' என்று தீர்மானித்தான்.

எனவே, காட்டிலேயே ஒரு குளத்தங்கரையில் இருந்த வில்வ மரத்தின் மீது ஏறி வாகாக உட்கார்ந்தான். இரவில், குளத்தில் நீர்ப் பருக வரும் விலங்குகளை வேட்டையாடலாம் என்று காத்திருந்தான். ஆனால், வெகுநேரம் ஆகியும்

விலங்குகள் எதுவும் அந்தப் பக்கம் வருவதாகத் தெரியவில்லை. தூக்கம் வேறு கண்ணைச் சுழற்றியது அங்குலனுக்கு.

'தூக்க கலக்கத்தில் மரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டால் என்னாவது' என்ற பயத்தில், ஓர் உபாயம் செய்தான். தூக்கத்தைக் கலைக்கும் விதமாக, மரத்தில் இருந்து வில்வ இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டான். அவ்வளவு இலைகளும் கீழே இருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்தன.

காற்று அதிகமாக வீசாத காட்டுப் பகுதியானதால் ஸ்வாமியின் மீது விழுந்த வில்வ இலைகள் அப்படியே, யாரோ ஒருவர் பொறுப்பாகப் பூஜை செய்து அலங்கரித்ததைப் போல் இருந்தது. பொழுது விடிந்தது. ஒரு விலங்குகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. மனம் வெறுத்துபோன அவன், வேறு வழியின்றி வீடு திரும்பினான். இரவு முழுவதும் கணவன் வராததால் பரிதவித்துக் கொண்டிருந்த அங்குலனின் மனைவி, காலையில் அவனைக் கண்டதும் நிம்மதி அடைந்தாள்.

அதுசரி! கதையின் முடிவென்ன என்று நீங்கள் கேட்பது புரிகிறது!

மிக அற்புதமான பலன் கிடைத்தது அங்குலனுக்கு. ஆமாம்! வாழ்நாள் முடிவில் அங்குலன், சிவ கணங்களில் ஒருவராகும் பேறு பெற்றான்.

'எப்படி...' என்கிறீர்களா?

காட்டில் அங்குலன் பகல் பொழுது முழுவதும் சாப்பிடாமல் இருந்து, இரவு முழுவதும் கண் விழித்து, மரத்தின் மேல் இருந்தபடி வில்வ இலைகளை உதிர்த்தது எல்லாமும் நடந்தது ஒரு சிவராத்திரி நாளில். அதன் விளைவாகத்தான் அங்குலனுக்கு சிவ கணங்களில் ஒருவராகும் பேறு கிடைத்தது. அறியாமல் செய்த வழிபாட்டுக்கே இப்படியொரு பலன் என்றால், பலன் அறிந்து பக்தியுடன் செய்யும் வழிபாட்டுக்கான மகிமையைச் சொல்லவும் வேண்டுமா?

இப்படிச் சிவனருள் பெற்ற வேடன் குறித்த கதைகள் வேறு சிலவும் உண்டு. ஒரு சிவராத்திரி தினத்தில், வேட்டைக்காக வில்வ மரத்தின் கிளையில் காத்திருந்தான் வேடன் ஒருவன். அன்றைய இரவின் மூன்று காலங்களிலும் முறையே இரண்டு பெண் மான்களும், ஒரு ஆண் மானும் அந்த இடத்துக்கு வர, வேடன் ஒவ்வொரு முறையும் வில்லில் அம்பு பூட்டி குறிபார்க்கும் தருணத்தில், மான் ஒவ்வொன்றும் தமது கடமையை நிறைவேற்றிவிட்டு வருவதாகக் கூறிச் சென்றன.

சொன்னபடியே அவை வந்து சேர்ந்ததைக் கண்ட வேடன், மனம் நெகிழ்ந்து அவற்றை கொல்லாமல் விட்டுவிட்டதாகவும், அவர்கள் அனைவருக்கும் சிவதரிசனமும் அருளும் கிடைத்ததாகவும் கதை நீளும்.

அவன் ஒவ்வொரு முறையும் வில்லில் அம்பு பூட்டி குறிபார்த்த வேளையில், அவனுடைய அசைவால் வில்வ இலைகள் உதிர்ந்து மரத்தடியில் இருந்த சிவலிங்கத் திருமேனியில் விழுந்தன என்றும், வேடன் இடையில் கட்டிவைத்திருந்த குடிநீர்க் குடுவையில் இருந்த தண்ணீர் விழுந்து லிங்கத் திருமேனியை அபிஷேகித்தது என்றும் இந்தக் கதை விவரிக்கும்.

இப்படி தன்னையுமறியாமல் வில்வார்ச்சனையும், அபிஷேகமும் செய்த அந்த வேடன், பெரும் புண்ணியம் பெற்றான். ஆம்! அவன் மறுபிறவியில் குகனாகப் பிறந்து, ஸ்ரீராமனே தன் சகோதரனாக ஏற்கும் வண்ணம் பேறு பெற்றான் என்றும் ஒரு திருக்கதை சொல்லப்படுகிறது.

**சிவராத்திரியில் லிங்கோற்பவ வழிபாடு!**

திருவாதிரை தினத்தில் நடராஜப் பெருமானையும், உமா மகேசுவர விரத காலத்தில் உமாமகேசுவரரையும், திரிசூலவிரதத்தின்போது அஸ்திர தேவரையும் வழிபடுவது போன்று, சிவராத்திரி தினத்தில் லிங்கோற்பவ மூர்த்தியை வழிபடவேண்டும். சிவராத்திரி புண்ணிய தினத்தில் நான்குகால பூஜைகள் நிகழும். இதில் மூன்றாவது காலம் லிங்கோற்பவ காலம்.

சிவனாரின் திருவடிவங்களில் ஒன்றான லிங்கோற்பவ மூர்த்தி வடிவத்துக்குக் காரணமாக, அயனும் அரியும் அடிமுடி தேடிய திருக்கதையைச் சொல்வார்கள். சிவராத்திரியில் லிங்கோற்பவ காலத்தில்தான், சிவபெருமான் நெருப்புத்தூண் நடுவில் இருந்து மான், மழு, அபய வரத முத்திரைகளுடன் தோன்றி அருள்பாலித்தார்.

லிங்கம் என்ற சொல்லுக்கு உருவம் என்பது பொருள். அங்ஙனம் உருவம் தாங்கி சிவனார் வெளிப்பட்டு அருள்பாலித்ததால், இது லிங்கோற்பவ காலம் எனப்படுகிறது. லிங்கோற்பவ திருவடிவில் லிங்க மூர்த்தியின் மையத்தில் அழல் போன்ற பிளவில் தனித்த சந்திரசேகரமூர்த்தி எழுந்தருளியிருக்க, பிளவினைச் சுற்றி அக்னிச் சுடர்கள் காட்டப்படுகின்றன. பெருமானின் பாதமும், உச்சியும் காட்டப்படுவதில்லை . இதன் மூலம் முதலும் முடிவுமற்ற நிலையில் அவர் இருப்பது உணர்த்தப்படுகிறது. லிங்கத்தின் கீழ்ப்பகுதியில் பன்றி வடிவில் திருமாலும், உச்சியில் அன்ன வடிவில் (அல்லது அன்னத்தின் மீது அமர்ந்தவாறு) பிரம்ம தேவனும் பெருமானின் அடிமுடி தேடும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளனர். மேலும் வலப்பகுதியில் பிரம்மதேவனையும் இடப்புறம் திருமாலையும், இருவரும் சிவனாரை வழிபடும் பாவனையில் அமைப்பதும் உண்டு. இம்மூர்த்தியை புராணங்களும் கல்வெட்டுகளும் 'லிங்க புராணமூர்த்தி' என்றே குறிப்பிடுகின்றன. சிவாலயத்தில் இவருக்கான இடம் கருவறையின் பின்புறம் அமையும் மாடமாகும்.

ஆலயத்தின் மற்ற இடங்களில் லிங்கோற்பவ மூர்த்தியை வைக்கும் வழக்கம் இல்லை.

லிங்கபுராணத் தேவரான லிங்கோற்பவரை கல் திருமேனியாக எழுந்தருளி வைப்பதே வழக்கமாகும். என்றாலும் தஞ்சாவூர் பெரிய கோயிலில் ராஜராஜ சோழனின் மனைவியால் செய்து அளிக்கப் பட்ட உலோகத் திருமேனியிருந்ததை கல்வெட்டு குறிக்கின்றது.

**லிங்கோற்பவ வழிபாடும் தலங்களும்**

சிவராத்திரியின் மூன்றாம் காலத்தில் இந்த மூர்த்திக்கு நெய்பூசி, வெந்நீரால் அபிஷேகம் செய்து, கம்பளித் துணிகள் அணிவித்து தாழை மடல்களால் அலங்கரித்து, எள்ளன்னம் நிவேதிக்க வேண்டும் என்பர். ஆகமங்களில் சொல்லப்பட்ட வகையில் லிங்கோற்பவரை பல்லவர்கள் கண்ட காஞ்சிக் கலைக்கோயில்கள் அனைத்திலும், வட ஆற்காடு மாவட்டம் குடிமல்லூரிலும் காணலாம்.

லிங்கோற்பவ மூர்த்தம் திருவண்ணாமலைத் தலத்தோடு தொடர்பு உடையதால் திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேசுவரர், ஏகாம்பரேசுவரர் ஆலயங்களில் இந்த மூர்த்தத்தைச் சற்று கலைநயத்துடனும் காவியநயத்துடனும் அமைத்துள்ளனர். இக்காட்சியின் பின்னணியில் அண்ணாமலையும், அதன் மீது தீபமும் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து வெளிப்பட்டு தேவியுடன் கூடியவாறு இடபம் பின் நிற்க பெருமான் காட்சியளிக்கின்றார். இத்தகைய அமைப்பான லிங்கோற்பவமூர்த்தியை எங்கும் காண முடியவில்லை.

பிள்ளையார்பட்டியில் உள்ள லிங்கோற்பவர், இரண்டு கரங்களுடன் காட்டப்பட்டிருக்கிறார். பொதுவாக லிங்கோற்பவ மூர்த்தியில் உள்ள சிவபெருமானை நான்கு கரங்களுடன் அவற்றில் மான், மழு, அபய, ஊரு முத்திரைகள் கொண்டவராகவே அமைப்பது வழக்கம். ஆனால் காஞ்சிபுரம் கயிலாசநாத கோயிலில் எட்டு கரங்களுடன் கூடிய லிங்கோற்பவரைக் காண்கிறோம். இவ்வடிவமும் வேறெங்கும் இல்லாததாகும்.

**(நன்றி : விகடன்)**

ஒரு பிரார்த்தனை மட்டும்தான் நாம் செய்ய வேண்டும். நாம் தெய்வீகமானவர்கள் என்று நமக்குக் கூறிக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கும் கூறவேண்டும்... இதை திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தால் நமக்கு வலிமை வந்துவிடும். முதலில் தடுமாறுபவர்கள் சிறிதுசிறிதாக அதிக உறுதி பெறுவார்கள். உண்மை, நம் இதயத்தில் இடம்பிடித்து, ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து, நம் உடல் முழுவதும் பரவும் வரையிலும் வலிமை அதிகரித்துக்கொண்டே போகும்.

(சுவாமி விவேகானந்தர்)

18.03.2019 – சுவாமிகளின் 55ஆவது குருபூசை தினம்

# யாழ்ப்பாணத்து சித்தராகப் போற்றப்படும் சிவயோக சுவாமிகள்

அ.கனகசூரியர்



யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் தோன்றியவர்களுள் ஒருவர்தான் தவத்திரு சிவயோக சுவாமிகள். சித்தர்கள் என்போர் சாதாரணமான மனிதர்க ளுள் ஒருவராகவே பிறப்பது வழக்கம். அவர்கள் சாதாரண வாழ்க்கை நிலையில் வாழ்ந்துவரும் போது, குறிப்பிட்ட ஒரு காலத்தில் இறைவனால் ஆட்கொள்ளப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இதனூடாக இறையுணர்வு கைவரப்பெற்ற நிலையில் அனுபூதிமான்களாக மாறி விடுகிறார்கள். அந்த வகையில் ஒருவராக விளங்கியவர் தவத்திரு சிவயோக சுவாமிகள்.

இவர் 1872ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி மாவிட்டபுரம் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர்கள் சூட்டிய பெயர் யோகநாதன். இளம் வயதில் தாயாரை இழந்த இவரை யாழ்ப்பாணத்திற்கு அண்மையிலுள்ள கொழும்புத்துறை என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்த இவரது மாமியார் (தந்தையின் சகோதரி) வளர்த்து வந்தார்.

கல்வியை முடித்துவிட்டு, கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராக கடமையாற்றி வந்தார். அப்போது தனது ஓய்வு நேரத்தை சமயப்பயிற்சியிலும் தியானம் மற்றும் திருமுறைப் பாராயணம் போன்ற ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபடுத்திக் கொண்டார். அவ்வேளையில் இறை சிந்தனையின் மேலீட்டால், தனது முப்பதாவது வயதில் கடமையிலிருந்து விலகி முற்றுமுழுதாகவே வாழ்க்கையை ஆன்மீக சாதனைக்காகவே அர்ப்பணித்துக் கொண்டார்.

அந்நாளில் நல்லூர்க் கந்தன் தேரடியில் வாழ்ந்து வந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையை அறிந்து கொண்ட யோகநாதன், ஒருநாள் அவரைத் தரிசிப்பதற்காக சென்றிருந்தார். முதலாவது சந்திப்பின் போதே "உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப்போகிறேன். வா வா" என்று அழைத்து ஞானோபதேசம் அருளினார் செல்லப்பா சுவாமிகள்.

இதன் பின்னரே யோகர் சுவாமிகளாக மக்கள் அனைவராலும் போற்றப்படும் வகையில் உயர் பக்குவ நிலை பெற்றார். சில ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் இணைந்திருந்த யோகர் சுவாமிகள் ஞானதீட்சை பெற்று, குருநாதரின் வேண்டுகோளின்படி கதிர்காமம் முதலான ஆலயங்களுக்கு பாதயாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலத்தின் பின்னர் திரும்பி வந்தபோது "இரு யானைகளை ஒரு முனையில் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறை சந்தியில் இலுப்பை மர வேரைப் பார்" என்றார் செல்லப்பா சுவாமிகள்.

சிவயோக சுவாமிகள் குருநாதரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு கொழும்புத்துறை சந்தியிலிருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்கள் தியான நிலையில் அமர்ந்திருந்தார். பின்னர், இதற்கு அண்மையில் அடியார்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட சிறு குடிசையொன்றில் தங்கியிருந்தார். இது 1914 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

அந்த வேளையில்தான் பலர் அவரை தரிசிப்பதற்காக வரத் தொடங்கினார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மட்டுமல்ல, நாடளாவிய ரீதியிலும் தமிழ், சிங்கள மக்களும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் வந்து சிவயோக சுவாமிகளின் அருளையும் ஆசியையும் பெற்றுச் சென்றுள்ளார்கள். சைவ மார்க்கம் பற்றியும் வேதாந்த சித்தாந்த தத்துவக் கோட்பாடுகள் பற்றியும் பேசுவார். அடியார்களுடன் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவார். சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்வார். யாருக்கு எது தேவையோ, அதை அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்கு பக்தியையும் உபாசனையையும் கற்பிப்பார். அடியார்களது வியாதியையும், மனக் கவலையையும் மாற்றுவதற்கான வழிமுறைகளை அருளினார்.

சிவயோக சுவாமிகள் பல தடவைகள் அடியார்களுடன் இணைந்து இந்தியாவுக்கு திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டிருக்கிறார். இவரது உபதேசங்கள். அறிவுரைகள், பாடல்கள் என்பன வாழ்க்கைக்கு வழி காட்டுவனவாகவே அமைந்துள்ளன. இவை ஒன்றுதிரட்டப்பட்டு 'நற்சிந்தனை' என்ற பெயரில் நூலாகவும் ஒலிநாடாவாகவும், இறுவட்டுகளாகவும் வெளிவந்துள்ளன. 'சிவதொண்டன்' என்ற பெயரில் மாத சஞ்சிகையொன்றை சுவாமிகள் வெளிவரச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிவதொண்டன் நிலையமொன்றையும் ஸ்தாபித்து இருக்கிறார். 'சுவாமிகளின் விருப்பத்தின்படி மட்டக்களப்பிலும் 'சிவதொண்டன்' நிலையமொன்று நிறுவப்பட்டிருக்கிறது. இப்போது மேலை நாடுகளிலும் சிவயோக சுவாமிகளின் நினைவாக ஆச்சிரமங்கள் இயங்கி வருகின்றன.

ஒரு சீடர் பரம்பரையை உருவாக்கிய பெருமை சுவாமிகளுக்கு உரியது. அமெரிக்கரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், இங்கிலாந்தைச் சேர்ந்த சாந்த சுவாமிகள், ஜேர்மனியைச் சேர்ந்த கௌரிபாலா சுவாமிகள், அவுஸ்திரேலியா நரிக்குட்டி சுவாமிகள், பிரான்ஸ் சந்திரபாலா சுவாமிகள் போன்றோர் வெளிநாட்டு சீடர்கள் பட்டியலில் முக்கியமானவர்கள். சிவயோக சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதத்து ஆயிலிய நட்சத்திரத்தில் தனது 91 ஆவது வயதில் மகா சமாதியடைந்தார். இவ்வருடம் மார்ச் மாதம் 18ஆம் திகதியன்று சுவாமிகளது ஐம்பத்தைந்தாவது குருபூசை தினமாகும்.



திருக்கேதீஸ்வரம்



திருக்கோணேஸ்வரம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் உன்னத தொண்டாற்றிய
திருமுறைக்காவலர் உயர்திரு சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம் அவர்கள்
13.02.2019 அன்று துர்க்காதேவியின் திருவடியைச் சென்றடைந்தார்.



**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப பொருளாளர்,**
**அருள் ஒளி உதவி ஆசிரியர்**
**பெருமதிப்புக்குரிய பெருந்தகைக்கு எங்கள் இதய அஞ்சலி**

## அமரர் ஏழூர்நாயகம் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்வுகளில் சில



## அமரர் ஏழூர்நாயகம் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்வுகளில் சில












நகுலேஸ்வரம்



முன்னேஸ்வரம்

## இறைவா பாவி எனை ஆளாயோ!

Dr.ஜி.எஸ்.சங்கர நாராயணன், காஞ்சிபுரம்



தாளிணையே பிடித்தேன் தள்ளிடினும் அகலேன்
வாளினையே யொத்து வருதுயரும் பொறுப்பேன்
தோளிணையைக் காட்டி துங்கவேய் பழிக்கும்
ஆளினையிடமுடைய ஐயனே காத்தருள்க!

அழகு மலராகும் அரிய திருவடியை
இழிய மனவண்டு எண்ணாமல் உலகமெனும்
அழுகு மலமுறையும் அவலத்தைக் காணாயோ
பழகு தமிழிறைவா பாவியெனை யாளாயோ!

வாணாளெலா முந்தன் வடிவதனைக் காணாமல்
வீணாளா யொழியும் வேதனையையென் சொல்ல
வாணுதலாள் இடமிருக்கும் வடிவழகுப் பெருமானே
நாணமிலா நாயனெனை நயந்தேற்க மாட்டாயோ!

கழுத்தினில் நஞ்சினைக் கறையென உடுத்தனை
வழுத்திய பிழையெலாம் வணங்கிடப் பொறுத்தனை
அழுத்திடும் தீவினை அகற்றியே எந்தலை
எழுத்தினை திருத்துக ஏழையின் ஏந்தலே!

தீவினையே யுருவான தீயுளமே படைத்தேன்
பாவியெனைக் கைவிட்டால் பார்ப்பதற்கும் யாருளரோ
ஆவியினைத் தீவினையே ஆளுதற்கும் முன்னெனை
மேவியுந்தன் திருவடியை மீதிருத்த மாட்டாயோ!

கும்பிக்கே யிரைதேடி கொடுவனத்து நாயெனவே
எம்பியே அலைகின்ற ஈனனெனைப் பாராயோ
அம்புலியை யணிகின்ற ஆதியனே நின்தாளே
நம்பிவந்தே னிறைவா நாயனெனை யாண்டருளே!

உன்னையே நினையாமல் ஒன்றுக்கும் பற்றாமல்
பின்னையும் குறையுருவாய் பிள்ளையேன் மருகிடவும்
அன்னையை அருகணைத்து ஆனந்தக் கடலிருப்ப
தென்னையோ வென்சிவனே இன்றேனும் அருளாயோ!

இன்றேனு மிரங்காயோ எழிலுடைய பெருமானே
கன்றெனவே நாளும் கதறுவதும் கேட்டிலையோ
குன்றனைய தீவினைநாய் குதறுவதைக் காண்கிலையோ
நின்றன் நிழலிலெனை நிலையிருத்த மாட்டாயோ!

தாயினும் கனிந்திந்தத் தமியேனைக் கருணையோடு
நீயணைக்க வேண்டுமென்று நிமலனே காத்திருந்தேன்
தீயினும் கொடியதாகும் தீவினை சூழுலகில்
பேயனை விட்டுவிடல் பெருமானே தக்கதாமோ!

**(நன்றி : தமிழ்வாசல்)**

# சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் தலைமையுரை

*(1946ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலான மூன்று நாட்கள் அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகா சபையின் ஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் அகில இலங்கை சைவ மகாநாடு நடைபெற்றது. முதல்நாள் விழாவுக்கு தலைமைவகித்த சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் நிகழ்த்திய உரை இது.)*

சிவபெருமான் முற்றறிவினரென்றும் அநாதி போதரென்றும் அறிவுக் கெல்லாம் மூலமாயுள்ளவரென்றும் நாங்கள் படித்தோம். ஆயினும் அவர் முற்றறிவின ரல்லரென்றும் அவர் அறியாத தொன்றுண்டென்றும், மணிவாசகப் பெருமான் பாடியருளினார். அன்றியும் சிவபெருமானின் வேறல்லராகிய சுப்பிரமணியப் பெருமான் முற்றறிவினரல்லரென்றும், அவர் அறியாத தொன்றுண்டென்றுங் கச்சியப்ப சிவாச்சாரியார் பாடியருளினார். சிவபெருமான் அறியாதது யாதெனில், "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண் சாழலோ" என்றார் மணிவாசகப் பெருமான். சுப்பிரமணியப் பெருமான், "முற்றுந் தானுங் காண்கிலன் இன்னரு முந்தன்பெருந் தலைமை" என்றார் கச்சியப்ப சுவாமிகள்.

சிவபெருமானுடைய பெருமையை அவரே அறியாராயின் நாங்கள் முத்தியடைந்த காலத்தும் அறிய மாட்டோம். அவரது பெருமை அத்தன்மையது. ஆதலால் அவரையடையச் செய்விப்பதாகிய சைவசமயத்தின் பெருமையும் எங்களால் அறியத்தக்கதன்று.

இத்தன்மையான சைவசமயத்தை எங்களுக்குத் தமிழிலே தந்தவர்கள் சமய குரவர்களும் சந்தான குரவர்களுமாம். அவருமிதைத் தந்ததற்கு நாங்கள் செய்யத்தக்க பிரதி யாது? வைதிகர்கள் தமக்கு நூல்களையருளியவர்களாகிய இருடிகளுக்கு ஆரிடையாகச் செய்கின்றார்கள். ஆரியாகம் எத்தன்மையதெனில் இருடிகள் தந்த அறிவை வளர்த்தலும் பரப்புதலும் காத்தலுமாம். நாம் எமது குரவர்களுக்குச் செய்யத்தக்க பிரதி மூன்றினுள் மிகக் குறைந்ததாகிய காத்தலையாயினும் செய்தல் வேண்டும்.

நாம் சைவசமயத்தைக் காக்க வேண்டிய துறைகள் பல. அவற்றுள் ஒன்று அதன் முதனூலாகிய வேதாகமங்களாம். சைவரென்ற பெயரைத் தாங்கிக் கொண்டு வேதாகமங்களை விலக்குகிறவர்கள் ஒரு சாராருளர். அவர்கள் பார்ப்பாரல்லாத வருணத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பார்ப்பாரைப் பகைத்து,

அவர்களுடைய மொழி சமஸ்கிருதமென்று வழங்கி அதைப் பகைத்து, வேத சிவாகமங்கள் அதிலிருத்தலால் அவற்றை இகழலாயினர். அவர்கள் தமக்குத் தேவார திருவாசகங்களையும் சித்தியார் முதலிய நூல்களையுமே சைவத்தின் முதனூல்களாகக் கொள்கின்றனர்.

திருவாசகமானது சிவபெருமானை வேதமெய்நூல் சொன்னவனே யென்றும், மன்னுமாமலை மகேந்திரமதனிற் சொன்ன ஆகமந் தோற்றுவித்தருளும் என்று வேதம் சிவாகமமாகிய இரண்டும் இறைவநூல் எனலாம். திருவாசகத்தை முதனூலாகக் கொள்ளுமிவர்கள் வேத சிவாகமங்களை மறுத்தல் பொருந்தாது. அன்றியும் பிராமணரது மொழி சமஸ்கிருதமன்று. அது எவர்களாலாயினும் பேசப்பட்டதன்று. அது பரதகண்டம் முழுவதற்கும் சாஸ்திர பாஷையாகவுள்ளது. ஆதலால் பார்ப்பாரை வெறுப்பவர் சமஸ்கிருதத்தை வெறுத்தல் பொருந்தாது. ஒருவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவரென்பது அவர் பேசும் மொழியினாலேயே நிச்சயப்படும். பிராமணர் பெரும்பாலும் தமிழையே பேசுகின்றனர். அவருடைய பாஷையை வெறுக்கில் இவர்கள் தமிழையல்லவா வெறுக்க வேண்டும்.

சிலர் தாங்கள் வேதங்களை வெறுத்தற்குக் காரணம் அது காற்று நெருப்பு நீர் முதலிய இயற்கைப் பொருள்களை வழிபடுதலும் யாகங்களிலே உயிர்க்கொலை வகுத்தலும், அவைகள் சிற்சில முனிவர்களாற் செய்யப்பட்டனவென்று வேதமே கூறுகின்றதுமேயென்பர். வேதத்திலே சொல்லப்படும் முனிவர்கள் மந்திர திருஷ்டாக்களாவார்களன்றி அவற்றைச் செய்தவர்களல்லர். மந்திர திருஷ்டாவென்பதன் பொருள் மந்திரத்தைக் கண்டவர் அதாவது அதன் பொருளை அறிந்தவர். வேதத்திலே யாகங்களிலே கொலை விதிக்கப்படவில்லை. யசுர்வேதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை வாசித்துப் பாருங்கள். அதிலே அசுவமேதம் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. அதிலே ஒரு உயிராவது கொல்லப்படுவதில்லை என்பதாக நீங்கள் காண்பீர்கள். இக்கொலைகள் பிற்காலத்தில் உண்டானவை. இருக்கு வேதத்திலேயுள்ள சில மந்திரங்களுக்கு உரை எழுதினவர்களுள் ஒரு சாரார் அவற்றிலே குதிரையொன்று கொல்லப்பட்டதாக உரை செய்திருக்கிறார்கள். அந்தவுரை தவறான உரையென்று பண்டிதர் குருதத்தர் எவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயங்காட்டி உறுதிப்படுத்தி இருக்கிறார்.

வேதத்திலே சொல்லப்பட்ட அக்கினி, வருணன்,வாயு என்ற பெயர்கள் கடவுளையே குறிக்கும் என்பது அவற்றின் தாதுப் பொருளினால் தயானந்த சரசுவதி சத்தியார்த்த பிரகாசத்திலே விளக்கியிருக்கிறார். அன்றியும் இருக்கு வேதத்தின் முதல் மண்டலத்திலேயே கடவுளை அறிவாளிகள் பல பெயர்களாற் சொல்வாராயினும் கடவுள் ஒருவரே என்ற பொருளுள்ள மந்திரம் ஒன்றுண்டு.

ஆதலால் இவர்களால் வேதங்களில் ஏற்றப்பட்ட குற்றங்கள் இவருடைய அறியாமையினால் உண்டானதேயன்றி வேதங்களில் உள்ளவைகள் அல்ல என்பதை அறிக.

சைவ சமயத்தைக் காக்க வேண்டிய வேறொருதுறை புறச் சமயிகள் தாக்குதலைத் தடுத்தலாம். புறச் சமயிகள் பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டு சைவப்பிள்ளைகளையும் சைவாசிரியர்களையும் கிறிஸ்தவர்களாக்குகின்றார்கள். கிறிஸ்து சமயத்தை இந்தவூருக்கு அனுப்பிய தேசங்களாகிய இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கிறிஸ்தவ சமயம் நிலை குலைகின்றது. இப்போது அத் தேசங்களிலே இருந்த பாதிரிமாரின் தொகை நன்றாய்க் குறைந்துவிட்டது. இங்கிருந்து கிறிஸ்தவர்களாக இங்கிலாந்துக்குப் போனவர்களுட் சிலர் அங்கிருக்கும்போது கிறிஸ்தவ சமயத்தை வெறுத்து சைவர்களாகி இங்கு வந்திருக்கிறார்கள். இங்குள்ள கிறிஸ்தவர்கள் பழையபடி சைவர்களாகி ஒன்றுமையாக வாழ்தல் நன்று. அவர்கள் ஒற்றுமையாகாவிடில் அவர்களாலே சைவசமயத்திற்கு இடர் நேராமல் காக்க வேண்டியது கடன் ஆகும்.

***(நன்றி : இந்து சாதனம் - 23.04.1946)***

## ஒருநாள் சிவராத்திரி விரதம், ஓராண்டு சிவனுக்கு பூஜை செய்த புண்ணியம்!

மகா சிவராத்திரி திருநாளன்று இரவு முழுவதும் கண்விழித்து நான்கு சாம பூஜைகளைச் செய்தால் சகல நலன்களும் பெறலாம் என்பது ஐதீகம். கண்விழிப்பது என்றால், உறங்காமல் இருப்பது என்று பொருளல்ல. ஆன்மா விழித்துக்கொண்டிருக்க வேண்டும். அதாவது, ஆன்மா இறை சிந்தனையிலேயே லயித்திருக்க வேண்டும். அதுதான் மகா சிவராத்திரி புண்ணிய நாளின் நோக்கம். கருட புராணம், அக்னி புராணம், கந்த புராணம், பத்ம புராணம், அருணாசல புராணம், சிவராத்திரி புராணம் உள்ளிட்ட பல நூல்கள் சிவராத்திரியின் மகிமைகளைப் பற்றிப் பலவாறாகக் கூறுகின்றன. அதைப்போலவே இந்தத் திருநாளின் மகத்துவத்தைப் பற்றி, 'மகாசிவராத்திரி கற்பம்' என்ற நூல் தெளிவாக விளக்குகிறது. 39 குறட்பாக்களால் உருவான இந்த நூல் ஈசனை வழிபடும் நியமங்கள், வழிபடுவதால் பெறும் பேறுகள், இந்த நாளில் விரதமிருந்து பேறு பெற்றவர்கள் என அனைத்து விபரங்களையும் கூறுகிறது. வேளாக்குறிச்சி ஆதீனத்தைச் சேர்ந்த மறைஞான சம்பந்தரால் எழுதப்பட்டது இந்த நூல். "கற்பம்" என்றால் விரதம் என்ற பொருளைத் தரும்.

# உருத்திராட்சம் - மகிமையும் சிறப்புகளும்

உருத்திராட்சம் சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து வீழ்ந்த விழிநீரின் அருள் வடிவமாகக் குறிப்பிடப்படுகிறது. மாமரத்தின் இலைகளைப் போன்று உள்ள ஒருவகை மரத்தின் பசுமை கலந்த நீல நிறம் கொண்ட பழங்களின் உள்ளேயுள்ள விதைகளே உருத்திராட்சமாகும்.

இந்திய நாட்டில் வங்காளக் காடுகள், அசாம் காடுகள், நேபாள நாட்டிலும், மற்றும் தென்னிந்தியாவில் உள்ள மைசூர் காடுகள், திருவண்ணாமலை ஆகிய இடங்களிலும் உருத்திராட்சம் கிடைக்கிறது. இவை வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய நான்கு வண்ணங்களில் இருந்தாலும், நாம் பரவலாகப் பார்க்கும் பழுப்பு நிறமானவையே (கருப்பின் மங்கிய வடிவம்) அதிகமாகக் கிடைக்கின்றன.

உருத்திராட்சம் அணிவதாயின் முதலில் உண்மையான உருத்திராட்சத்தை அறிந்து வாங்க வேண்டும். ஒரு இலந்தைப் பழத்தின் அளவுள்ள உருத்திராட்சம் மத்தியமான தரம், அதன் அளவு கூட கூட அதன் தரம் உயரும், அளவு குறைய குறைய தரம் குறையும்.

பத்திராட்சம் என்ற மணி உருத்திராட்சம் போலவே இருக்கும். அவை நல்ல பலன்களைத் தராது. உண்மையான உருத்திராட்சத்தை நீரில் போட்டால் மூழ்கிவிடும். போலியானவை மிதக்கும். மேலும் கல்லில் உரைக்கும் போது தங்க நிற கோடுகள் கல்லில் பதியும். இரு செம்பு நாணயங்கள் நடுவில் உருத்திராட்சத்தை வைத்தால், மின் சுழற்சியின் காரணமாக அது சுழலும். இவ்வாறு உண்மையான உருத்திராட்சத்தை சில ஆய்வுகள் மூலம் கண்டறியலாம்.

ஒரு மரத்தின் விதை வடிவம் என்பதையும் தாண்டி, அதில் பலவித சூட்சுமமான தெய்வீக சக்திகள் உள்ளன என்பதை பலர் தமது சுய அனுபவங்களிலும், பலர் தமது அறிவியல் பூர்வமான ஆய்வுகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்கள். உருத்திராட்சத்தின் ஒவ்வொரு முகத்திற்கும் ஒவ்வொருவிதமான பயனைத் தரத்தக்க சக்திநிலை வெளிப்பாடுகள் உள்ளன.

(ஏக)முகம் எனப்படும் ஒரு முக உருத்திராட்சம் மிகவும் அரிதான ஒன்றாகும். அது பல வருடங்களுக்கு ஒரு முறையே தோன்றக்கூடிய விலை மதிக்கமுடியாத ஒன்றாகக் கூறப்படுகிறது. சிவபெருமானின் பூரண அருளைத் தரக்கூடிய தன்மை பெற்றிருப்பது இந்த ஏக(ஒரு)முக உருத்திராட்சம்.

இரு முகங்களைக் கொண்ட கௌரி சங்கர் என அழைக்கப்படும் உருத்திராட்சம் அர்த்தநாதீச்சுரருக்கு உரியதாகும். இதை அணிவதால் குடும்ப

உறவு முறைகளுக்குள் நல்ல சுமுகமான போக்கு நிலவும். இது நவக்கிரகங்களில் சந்திரனுக்கு உரியதாகும்.

பலன்: மனம் எப்பொழுதும் சீரான நிலையிலிருக்கவும் மற்றவர்களோடு பழகும் தன்மையில் மேம்பட்டிருக்க வேண்டுமாயின் சந்திரனின் பலம் அவசியமாகிறது. மேலும் நமது உடலில் உள்ள நீர்த்தன்மையில் நன்மை தரத்தக்க விளைவுகளை ஏற்படுத்துவதில் இருமுக உருத்திராட்சம் சிறப்பு வாய்ந்தது.

மூன்று முகங்களைக்கொண்ட (திரிமுக) உருத்திராட்சம் அக்னி அம்சம் பெற்றது. நவக்கிரகங்களில் செவ்வாய்க்குரியது. விளையாட்டுத் துறையில் வெற்றிகளைக் குவிக்க விரும்புவோர் மும்முக உருத்திராட்சத்தை அணியலாம். இது மனதில் தைரியத்தையும், துணிவையும் தருவதோடு உடலியக்கங்களின் துடிப்பான செயல்திறனையும் மேம்படுத்தும்.

பலன்: தொழிற்சாலைகளில் பணி புரிபவர்கள் ஆகியோரது சுய வளர்ச்சியையும் உயர்த்தும். சுறுசுறுப்பு குறைந்தவர்களும் இதையணிந்து பயன் பெறலாம்.

நான்கு முகங்களைக் கொண்ட (சதுர்முக) உருத்திராட்சம் பிரம்மாவின் அம்சம் கொண்டது. நவக்கிரகங்களில் புதனுடைய அம்சத்தைப் பெற்றது. இதையணிவதால் சுவாசக் கோளாறுகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். திக்குவாய் உள்ளவர்கள் நான்கு முக உருத்திராட்சத்தை அணிவதால், அவர்களது பேச்சுத்திறன் நிச்சயம் மேம்படும்.

பலன்: கணினிப்பொறித் துறையினர், மின்னியல் கருவிகள் சம்பந்தமான தொழில், அறிவியல் ஆய்வு சம்பந்தமான துறை, ஒரு நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருப்போர் இதை அணிவதால் நற்பலன்களைப் பெறலாம்.

பரவலாகக் காணக்கிடைக்கும் பஞ்சமுக (ஐந்து முகம்) உருத்திராட்சம் சிவ அம்சம் பொருந்தியது. நவக்கிரகங்களில் குரு பகவானின் அம்சம் பெற்றதோடு ஆழ்ந்த கல்வியறிவையும் மனதின் சமநிலையையும் தரும் தன்மையைக் கொண்டது.

பலன்: இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கும் மருத்துவ குணம் இரத்த அழுத்தம் சம்பந்தமான உடற்பிணிகளையும் நீக்கக்கூடிய தன்மையையும் பெற்றதாக இந்த உருத்திராட்சம் விளங்குகிறது. நம்மைச் சுற்றி ஒரு பாதுகாப்புக் கவசம் போன்று அமைந்து காப்பாற்றக்கூடியது.

சண்முக உருத்திராட்சம் எனப்படும் ஆறுமுகம் கொண்ட உருத்திராட்சம் கந்தக்கடவுளின் அம்சம் பொருந்தியது. நவக்கிரகங்களில் சுக்ரனின் அம்சம்

பெற்றது. கலியுகம் சார்ந்த உலக வாழ்க்கை நலன்களைத்தரும் வல்லமை கொண்டது. உடலில் ஜனனேந்திரியங்களின் செயற்பாட்டில் சம நிலையை உண்டாக்கி மனதின் ஈர்ப்பு சக்தியை மேம்படுத்தக்கூடியது.

பலன்: இல்லற வாழ்வில் மகிழ்ச்சியான போக்கு நிலவச் செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. வெகுசனத் தொடர்பு சாதனங்களில் தொழில் ரீதியாக சம்பந்தப்பட்டிருப்பவர்கள் இதை அணிந்து சனவசிய சக்தியைப் பெற்று நல்ல பலன்களை அடையலாம்.

சப்தமுக (ஏழு முகம்) உருத்திராட்சம் இலக்குமியின் மங்கள அம்சத்தைக்கொண்டது. நவக்கிரகங்களில் சனிபகவானுடைய சுப அம்சம் பொருந்தியது. அதாவது, சனி பகவானின் அலை வீச்சை சாதகமாகவும் நன்மைகள் தரும் விதமாகவும் மாற்றியமைக்கக் கூடியது.

பலன்: நுரையீரல் சம்பந்தமான பல கோளாறுகள் நீங்கவும், வறுமைத்துயர் நீங்கி வளமான வாழ்வை ஒருவர் பெறவும் இந்த உருத்திராட்ச மணி பெரும் துணை புரியக்கூடியது. ஏழரைச்சனியின் காலம், அட்டமச் சனியின் காலம், கண்டச்சனியின் காலம், சனி திசையின் காலம் ஆகிய சனிக்கிரகத் தொல்லைகளில் இருந்து விடுபட இந்த சப்தமுக உருத்திராட்சம் பெரும் துணை புரியும். இந்த வகை மணிகளை உடலில் அணிவதைவிட பூசையறையில் வைத்துத் தினமும் பூசிப்பதே நல்லது. நீண்ட காலமாகத் தொல்லை தந்துவரும் நோய் நொடிகளைத் தீர்க்க இந்த மணியை முறையாகப் பயன்படுத்துவதன் மூலமாக பலன்களை நிச்சயம் அடையலாம்.

விநாயகப் பெருமானின் அம்சம் கொண்ட அட்டமுக உருத்திராட்சமானது எண் முக மணியாகும். நவக்கிரகங்களில் இது ராகுவின் அலைவீச்சைக் கட்டுப்படுத்தக்கூடிய வலிமையான அலையியக்கக் காந்த மண்டல சுழற்சியினை உடையது.

பலன்: உருத்திராட்சங்களிலேயே மிக மிகக் கவனமாகச் சோதனை செய்த பின்பே இதை வீட்டில் வைத்துப் பூசை செய்ய வேண்டும். உடலில் அணிவது பெரும்பாலும் இந்த மணியின் விடயத்தில் தவிர்க்கப்படுகிறது. உளவியல் சிக்கல்களுக்குட்பட்டவர்களின் மனநலம் மேம்பட ஒரு குறிப்பிட்ட கால அளவிலும் ஒரு குறிப்பிட்ட முறையிலும் இதை பூசை செய்து வருவது மிக மிக நல்லதாகும்.

இந்த மணிகள் வாழ்வியலின் நூதனமான அனுபவங்களைத் தந்து மனோரீதியான தனிப்பட்ட விளைவுகளால் ஒருவரை அறிவியலின் அடிப்படைகளுக்குட்படாத புதிரான விளைவுகளுக்கு உள்ளாக்கக்கூடிய அதீத சக்தியின் சுழற்களம் அமையப் பெற்றவையாகும்.

அன்னை பராசக்தியின் அம்சம் கொண்டது நவமுக (ஒன்பது முகம்) உருத்திராட்சம். நவக்கிரகங்களில் கேதுவுக்குரியது. பலன்: இதைப் பெரும்பாலும் சாக்த முறையிலான சக்தி சாதனையின் நெறி நிற்போர்( மாந்திரீகர்) தமது சாதனையின் பூர்த்திக்காக விரும்பி அணிவர். இதை அணிந்தால் பொறுமையும் நிதானமும் மனதில் நிலைத்து நிற்பதோடு மனதில் பயம் சார்ந்த உணர்வுகள் யாவும் விலகி விடும். மேலும், பிற மொழிகளில் நிபுணத்துவம் பெறவும், இலக்கண, இலக்கியம் சார்ந்த அறிவின் மேம்பட்ட நிலைக்கும் இந்த மணி பெரிதும் உறுதுணை புரிகிறது. கேது கிரகத்தின் கெடுபலன்களான கீழே விழுந்து அடிபடுதல், கடும் எதிர்மறை எண்ணங்கள், கெட்ட கனவுகள், புரியாத உடல் நிலைக் கோளாறுகள் ஆகிய சங்கடங்களைச் சரியாக்கும் தன்மையை உடையது இந்த உருத்திராட்சம்.

தசமுக உருத்திராட்சமானது விஷ்ணுவின் அம்சம் பொருந்தியது. தசாவதாரங்களையும் குறிப்பது போல பத்து முகங்களை கொண்டது. இம்மணி விஷ்ணுவின் திருவருளை ஒருங்கே பெற்றுத்தருவதாக நம்பிக்கை.

ஏகாதச உருத்திராட்சமானது பதினொரு முகங்களைக் கொண்டதாகும். பலன்: உருத்திர அவதாரமான ஆஞ்சநேயரின் அம்சம் பெற்ற இந்த மணி மனதின் ஆற்றலைப் பன்மடங்காக ஆக்கக் கூடியது. பிரம்மச்சரிய விரதத்தில் நிலைபெற விரும்புவோர் இதனையணிந்து நற்பயன் பெறலாம்.

துவாதச உருத்திராட்சம் எனப்படும் பன்னிருமுக உருத்திராட்சம் சூரிய பகவானின் திருவருளைப் பெற்றுத்தரக்கூடியது. பலன்: அரசுத்துறை சார்ந்த வேலைவாய்ப்பை எதிர்நோக்குபவர்கள், பணியில் உயர்வு பெற விரும்புவோர் ஆன்மிக பலம் வேண்டுவோர் இம்மணியை அணியலாம்.

இதைவிட அதிகமான முகங்கள் கொண்ட உருத்திராட்சங்களும் உண்டு. அவை அதிக அளவிலான அதிர்வலைகளை வெளிப்படுத்துவதால் அணிபவைக்கு உகந்தது அல்ல என சான்றோர்கள் கூறுகின்றார்கள்.மற்றும் உருத்திராட்சம் அணிவதற்கு பாலினமோ வயதோ இல்லை எனவும் கூறுகின்றார்கள்.

உருத்திராட்சத்தை எப்படி வேண்டுமானாலும் அணியலாம். ஆனால் உருத்திராட்சத்தை தனியாக அணியாமல் ஏதாவது ஒரு உலோகத்துடன் சேர்த்து அணிந்தால் அது இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு நல்லது என்று சொல்கிறார்கள். அதனால்தான் உருத்திராட்சத்தின் இரு பக்கத்திலும் பூண் போன்று செய்து அதனை நூலில் கட்டித் தொங்க விடுகிறார்கள்.

**(நன்றி : இணையம்)**

# அறம் நல்கும் பசுவைப் பேணுவோம்

அமரர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

சைவ மக்களுடைய வாழ்க்கையிலே பசு ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. பசுக் கூட்டம் என்னும் போது எருதும் இதில் அடங்குகிறது. திருமுறைகள் இடபத்தில் இறைவன் எழுந்தருளி வருவதாகக் கூறுகின்றன. இலக்கியங்களும் ஆநிரைபற்றிப் பல தகவல்களைத் தந்துள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பசுக்கூட்டங்களே மேலான செல்வம் எனக் கருதப்பட்டு அதனை மிகக் கவனமாகப் பேணி வளர்த்தனர். "வாழ்க அந்தணர்" என்று பாடத் தொடங்கிய ஞானசம்பந்தர் ஆனினத்தை வானவருக்கு அடுத்துப் பாடியுள்ளார். மேலும் திருமூலர் "யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" என்று பாடி பசுவுக்கு உணவு கொடுப்பது உயர்ந்த தர்மம் என்பதை விளக்கியுள்ளார். பசுவிலே மகாலஷ்மியும், தேவர்களும், முனிவர்களும் வாசம் செய்கிறார்கள் என்பதால் அது ஒரு வழிபாட்டுக்குரிய தெய்வத்தன்மை பொருந்திய மிருகமாகக் கருதப்படுகிறது.

ஆலயங்களிலே நடைபெறும் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் என்பவற்றிலும், திருமண வைபவத்திலும் பசுவுக்கு முதன்மை கொடுக்கப்படுகிறது என்பது யாவருமறிந்ததே. மற்ற எந்த மிருகத்துக்கும் இல்லாதவாறு பசுவுக்கு பொங்கல் விழாவை பட்டிப் பொங்கல் என்று கொண்டாடுவது தமிழர் மரபாகிறது. ஒருமுறை தஞ்சாவூரிலே ஏராளமான பசுக்களை காவேரி நதியிலே நீராட்டி, கொம்புக்ளுக்கு வர்ணம் தீட்டி, விபூதி, சந்தனம், குங்குமம் என்பன அணிந்து பட்டுத்துணியால் போர்த்து மாலை அணிவித்து, நாத இசையுடன் அழைத்துச் சென்றதை கண்டு மகிழும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்நிகழ்ச்சி அன்று மாலை நடைபெற இருந்த பட்டிப் பொங்கல் முன்னோடியாக அமைந்தது.

தமிழ் மக்கள் விஷேடமாக சைவ மக்கள் விவசாயத்தைத் தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த காரணத்தால் வீடுகள் தோறும் பசுக்களை வளர்த்து பயனடைந்தனர். பசு இறைவனுடைய அபிஷேகத்திற்கு வேண்டிய பால், தயிர் என்பவற்றையும், தீபம் ஏற்ற நெய்யையும், குற்றம் நீக்க பஞ்ச கௌவியத்தையும், விபூதி தயாரிக்க சாணத்தையும் தந்துதவுகிறது. பாரத நாட்டிலே அதிகமான ஆலயங்களுக்கும் ஆதீனங்களுக்கும் அருகாமையில் கோசாலை அமைந்திருக்கும். அங்கு பசுக்கள் வளர்க்கப்பட்டு ஆலயத் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள் என்பது சைவ மக்கள் பின்பற்ற வேண்டிய விடயமாகும். அங்கு பூசை முடிந்தவுடன் கோபூசை இறுதியாக நடக்கும்.

பெரியபுராணத்தில் திருவாரூர்த் திருநகரின் சிறப்பு கூறப்படுகிறது. அங்கு சூரியவம்சத்தைச் சேர்ந்த மனுநீதிச்சோழன் ஆட்சி செய்த சிறப்பை சேக்கிழார் பெருமான்,

**"மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்**
**கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்**
**விண்ணு ளார் மகிழ் வெய்திட வேள்விகள்**
**எண்ணி லாதன மாண இயற்றினான்"**

எனப் பாடிக் காட்டியுள்ளார். மனுநீதிச் சோழனின் மைந்தன் மாடவீதியிலே தேரிலே செல்லும்போது ஒரு பசுக்கன்று விரைவாக ஓடி வந்து தேர்க்காலில் அகப்பட்டு இறந்து விட்டது. இச்செய்தியைக் கேட்ட மன்னன், கதறிக்கொண்டு சோர்ந்து நிற்கும் பசுவைப் போன்று துயரம் எய்தி விடம் தலைக்கேறியது போலப் பதறி, தன்னுடைய நல்லாட்சிக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டதே எனச் சோர்ந்தான். பின்னர் ஒரு மந்திரியை அழைத்து பின்வருமாறு கூறினான்:

**"மன்னவன்தன் மைந்தனை அங்கழைத் தொருமந் திரிதன்னை**
**முன்னிவனை அவ்வீதி முரண் தேர்க்கால் ஊர்க என**
**அன்னவனும் அது செய்யா தகன்றுதன் ஆருயிர்துறப்பத்**
**தன்னுடைய குலமகனைத் தான் கொண்டு மறுகணைந்தான்"**

பசுக்களைக் தன் தெய்வீக இசை மூலம் கவர்ந்த ஆனாய நாயனார் வாழ்க்கை பல போதனைகளை எடுத்து இயம்புகின்றது. ஒருநாள் இடையர்கள் பசு நிரைகளை சூழ்ந்து செல்ல ஆயர் குலத்தில் சிவபக்தியிற் சிறந்த ஆனாயநாயனார் கையிலே கோலும், வேய்ங்குழலுங் கொண்டு நிரை காக்கும் பணியில் ஈடுபட்டார்.

அங்கு கொத்துக் கொத்தாக மலர்ளைத் தாங்கி, சிவபெருமானை நினைப்பிக்கும் ஒரு கொன்றை மரத்தடியில் நின்று வேய்ங்குழலிலே இசை நூல்களிலே விதித்தபடி ஸ்ரீபஞ்சாட்சரத்தை வாசித்தார். இவ்விசையை செவிமடுத்த பசுக் கூட்டங்களும் காட்டிலுள்ள ஏனைய மிருகங்களும் செயலற்று நின்றன. ஆனாய நாயனார் ஆற்றிய புனிதப் பணி காரணமாக இறைவன் அவருக்கு முத்திப் பேறு கொடுத்தருளினார்.

பசுக் கூட்டத்தைப் பேணிப் பாதுகாத்து, சண்டேஸ்வரர் பதவியைப் பெற்று நீங்காத தியானத்தில் விளங்குபவர் விசாரசருமர். நான்மறைகளின் சிறப்பு விளங்க, மறையோர் குலம் விளங்க, ஏழுலகங்களும் உய்ய விசாரசருமர் வந்துதயம் செய்தார். அந்தணர்களுடைய பசுக் கூட்டங்களை மண்ணியாற்றங் கரையிலே மேய்க்கும் பொறுப்பை ஏற்ற ஒருவர் அண்மையில் கன்று ஈன்ற பசுவைக் கோலால் அடிப்பதைக் கண்ட விசாரசருமர் தானே அப்பொறுப்பை அன்று முதல் ஏற்றுக் கொண்டவர். விசாரசருமர் பொறுப்பேற்று பசுக் கூட்டத்தைப் பேணிய தன்மையை,

**"ஆயநிரையின் குலமெலாம் அழகின் விளங்கி மிகப்பல்கி**
**மேய இனிய புல்லுணவும் விரும்பு புனலும் ஆர்தலினால்**
**ஏயமனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தி இரவும் நண்பகலும்**
**தூய தீம்பால் மடி பெருகிச் சொரிய முலைகள் சொரிந்தனவால்"**

என சேக்கிழார் பெருமான் விளக்கியுள்ளார். அந்தணர்கள் பசுக்கள் மூலம் கூடுதலான பாலைப் பெற்று மிக மகிழ்ந்தனர். மேலும்,

**"அனைத்துத் திறந்தும் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி**
**மனைக்கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று**
**தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்**
**கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தவால்"**

என பசுக்கூட்டங்கள் பால் சொரிந்த விதத்தை சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டுகின்றார்.

பாலைப் பசுக்கள் சொரியக் கண்ட அந்தணச் சிறுவன் சிவலிங்கத்தைத் ஸ்தாபித்து, மஞ்சனமாட்டி பூசை செய்து மகிழ்ந்தான். நிரைக்குலங்கள் பால் சொரிய பல நாள்களாகப் பூசை நடைபெற்று வந்தது. பூசையை விரும்பி ஏற்ற இறைவன் பூதகணங்கள் சூழ சிறுவன் முன் தோன்றி "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய், அடுத்த தாதை இனி உனக்கு நாம்" எனத் திருவாய் மலர்ந்து அணைத்துக் கொண்டார். இறைவனுடைய திருமலர்க்கை தீண்டப் பெற்றதனால் பக்திமிக்க பாலகனார் சிவமயமானார். ஆநிரைகளை அன்புடன் பேணி, அளவுடன் பயன்படுத்திய சிறுவன் ஞாலம் அறியப் பிழை செய்தாலும் குற்றம் நீங்கி சுற்றமுடன் சிவலோகம் எய்தினாரர். இறைவன் மறைச் சிறுவனுக்கு சண்டீசர் பதவியை வழங்கினான் என்பதனை,

**"அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி அனைத்தும் நாம்**
**உண்ட கலமும் உடுப்பனவுகள் சூடுவனவும் உனக்காகச்**
**சண்டீ சனுமாம் பதந்தந்தோம் என்றங்கவர் பொற்தடமுடிக்குத்**
**துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்**

என சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டுகிறார்.

பசுக்களைப் பேணுவது சைவ மக்களுடைய தலையாய கடமை என்பதை யாவரும் அறிவர். சாதுவான, நற்பலனைத் தருகின்ற ஆநிரைகளை துன்புறுத்துவதை சைவ மக்கள் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று நடைபெறும் சைவத்துக்கு மாறான சில செய்கைகளை நாம் மன வேதனையுடன் பார்த்துக் கொண்டு இருக்கவேண்டிய துரதிர்ஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. எனவே பாடசாலைகள், ஆலயங்கள், சமய நிறுவனங்கள் மக்கள் மனதிலே நல்லெண்ணத்தை ஏற்படுத்தி நிரைக்கூட்டங்களைப் பேண முன்வர வேண்டும். பசுக்கூட்டங்கள். முறையாகப் பேணப்பட்டால் நாட்டிலே அமைதி, சமாதானம், மகிழ்ச்சிகரமான வாழ்வு, செல்வம், மகாலஷ்மி கடாட்ஷம் என்பன ஏற்படும் என்பது பெரியோர் கருத்து.

# யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

சைவநெறி, தான தருமங்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கிறது. தானங்களில் பலவகை உண்டு. அவற்றுள் அன்னம், தண்ணீர், உடை என்பவற்றைத் தேவைப்படுவோருக்கு தானமாக வழங்குதல், மிக உயர்வான தானம் என்று சொல்லப்படுகிறது. 'யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி' என்கிறார் திருமூலர். சாப்பிடும் வேளைகளில், தாம் உண்ணும் உணவில் ஒரு பகுதியை அதிதி ஒருவருக்காயினும் கொடுத்து உண்ண வேண்டும் என்கிறது சைவநெறி. 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' என்பது சைவர்களின் நிலைப்பாடு. தினமும் ஒருவருக்கு உணவளிக்காது உண்பது பாவம் என்று கருதப்படுகிறது. இல்லறத்தார், சமையல் செய்தபின் யாராவது உணவு உண்ண வருவார்களா என்று எதிர்பார்த்து வீட்டு வாயிலில் நிற்கின்ற வழக்கம், முன்னர்க் காலங்களில் இருந்தது. விருந்தோம்பல் சைவப் பண்பாடாக மலர்ந்தது.

வீடுகளில், அதிதி, வயோதிபர்கள், குழந்தைகள் என்போருக்கு முதலில் உணவு கொடுத்துச் சாப்பிடச் செய்த பின்னர் தான், கணவன், மனைவி ஆகியோர் சாப்பிடுவது சைவ வழக்கம். எத்தகைய உணவானாலும் முதலில் இறைவனுக்கு அர்ப்பணித்து, உணவைக் கிடைக்கச் செய்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறிவிட்டுத் தான் உண்ணுதல் சைவமரபு. இறைவனுக்கு அர்ப்பணம் செய்த உணவு அமிர்தமாகின்றது. அவ்வாறு அர்ப்பணிக்காத உணவு நஞ்சாகி விடுகின்றது.

விரதம் அனுட்டிப்பவர்கள் காகத்திற்கு முதலில் சோறு வைத்து, காகம் சாப்பிடும் வரை காத்திருந்து, அது உண்ட பின், தாம் சாப்பிடும் வழக்கம் இருந்து வருகிறது. புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் பிடிப்பவர்கள் காகத்திற்குச் சோறு வைத்து உண்ணும் வழக்கத்தை இற்றைவரை கடைப்பிடித்து வருகிறார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது? 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' வழக்கம் சைவமக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருவதைக் காட்டுகிறது. ஆனால், இன்று நிலைமை மாறி வருகின்றது. நலிந்தோர் ஊனமுற்றோர், ஏழைகள், பசித்து வருவோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு அன்னம், வஸ்திரம், ஆடை என்பவற்றை உபகரித்து ஆதரவு அளிக்க வேண்டியது, சைவசமயக் கடமையாகும். சைவசமயம் சமூகப் பணிகளையும் சமயப் பணிகளாகவே கொள்ளுகின்றது என்பதை நாம் கருத்திற் கொள்ளுதல் அவசியம். இத்தகைய தான தர்மங்களைச் சைவமக்கள் செய்யாமல் விடுவதாலேயே, சைவசமயத்தில் சமூக சேவைக்கு இடமளிக்கவில்லை என்று வீணான குற்றஞ் சுமத்தப்படுகிறது. உண்மையில், சைவ சமயத்தில்தான் சமூகப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம்

அளிக்கப்பட்டிருக்கிறது. தானம் செய்தல், தருமஞ் செய்தல், அறஞ் செய்தல் என்பன சைவசமயத்தில் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. சைவ நாயன்மார்களின் வரலாறு சமூகத் தொண்டின் வரலாறாகவே உள்ளது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்கிறார் நாவுக்கரசர். பிடியரிசி பெற்றும், கஞ்சித் தொட்டித் தருமம் செய்தும் சமூக சேவைக்கு வழிகாட்டியிருக்கிறார் நாவலர் பெருமான்.

அன்னதான மடங்களில்லாத கோயில்களே இல்லை. அன்ன சத்திரங்கள இல்லாத ஊர்களே இல்லை. இவையெல்லாம் சைவப் பண்பாட்டின் அங்கங்கள். ஆனால் தற்காலத்தில் நிலைமைகள் மாறிவிட்டன. சைவப் பண்பாட்டினைப் போற்றாமல் விட்டதனால்தான், இத்துணை சீரழிவும், சைவத்தில் சமூக சேவைக்கு இடமில்லை என்ற குற்றச்சாட்டும், நம்மை வந்து அடைந்துள்ளன.

பசி எல்லோருக்கும் பொதுவானது; தாகமும் அப்படியே. மானத்தைக் காப்பதற்கு உடை தேவைப்படுகிறது. இத்தேவைகள் எல்லோருக்கும் பொதுவானவையே. இருப்பவர்கள், இல்லாதவர்களுக்குக் கொடுத்து, அவர்களின் இவ் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுதல், ஒவ்வொருவரினதும் கடைமையாகும். உண்மையில் இதுதான் சமயத் தொண்டு.

என்னதான் இறைவழிபாடு செய்தாலும் பூசை கிரியைகள் புரிந்தாலும் புனித யாத்திரைகளை மேற்கொண்டாலும் புண்ணிய தீர்த்தங்கள் ஆடி வந்தாலும் தான தருமங்கள் செய்யாவிட்டால், அவற்றால் ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை. மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பதைக் கருத்தில் கொள்வோம். அதுவே சைவத்தின் நிலைப்பாடும் ஆகும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

## துளசியின் மகிமை

உலகப் புகழ்பெற்ற மூலிகையாக துளசி மருத்துவ விஞ்ஞானிகளால் பாராட்டப்படுகிறது. அனைத்து நோய்களுக்கும் கைகண்ட மருந்தாகத் திகழ்கின்ற துளசி பாட்டி வைத்தியத்தில் இடம்பெற்ற காலம்போக இப்போது நவீன மருந்துகளாகத் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. துளசி இலைகள் சிலவற்றைத் தண்ணீரில் அலம்பி வாயிலிட்டு மென்று அதன் அருமையான மருத்துவக் குணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

வீட்டுத் தோட்டத்தில் வளர்ந்து நிற்கும் துளசியை நாம் சரிவரப் பயன்படுத்தாததன் விளைவு பல நோய்களுக்கு ஆளாக வேண்டிய பரிதாப நிலைமை ஏற்பட்டுள்ளது. கபத் தொல்லை என்றும், காய்ச்சல் என்றும், இருமல் என்றும் பற்பல தொல்லைகளையும் சர்மநோய்களையும் குணப்படுத்தும் ஆற்றல் கொண்ட துளசியை நாம் உதாசீனப்படுத்திவிட்டு எடுத்ததற்கெல்லாம் மருத்துவரை நாடிச்செல்ல வேண்டிய நிலைமை இப்போது தோன்றியுள்ளது.

சிறுவர் விருந்து

## ஒரு குருவும் மகனும்

**சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்**

மாசி மாதத்திலே வருகிற அமாவாசைக்கு முதல் நாள் மகாசிவராத்திரி என்று சொல்லப்படும். அந்த நாள் கடவுள் வழிபாட்டிற்கு மிகவும் தகுதியான நாள். சைவசமயிகள் அன்று பகல் ஒன்றும் உண்ணாமலிருந்து கடவுளைத் தியானிப்பதில், அல்லது வேறு புண்ணியமான செய்கைகளிற் பொழுது போக்குவார்கள். மற்றைய நாட்களில் பெருங்குற்றஞ் செய்பவர்களும் அன்றைக்கு நீதியாக நடக்க நினைப்பர். இரவு முழுவதும் கடவுள் வழிபாட்டிலே கழியும். அன்றைக்குக் கோயில்களிலே நான்கு ஜாமமும் பூசை நடக்கும். பகலிலே வேறு முயற்சியுள்ளவர்களும் இரவு முழுவதுஞ் சிவபெருமானை வணங்குவார்கள். அதற்காக அன்றிரவு நித்திரை கொள்ளலாகாது என்று பெரியோர் சொல்லுவர். கோயில்களிலே அன்றிரவு பூசை நேரந் தவிர மற்றைய நேரங்களிற் புராணம் படித்துப் பொருள் சொல்வது வழக்கம்.

சிவராத்திரி தினத்தில் ஒரு கோயிலிலே புராணம் படிக்கப்பட்டது. குருக்களுடைய மகன் பாட்டுக்களை வாசிக்கக் குருக்கள் கருத்துச் சொன்னார். சற்று நேரம் சென்ற பின் புராணங் கேட்டவர்கள் பலர் உறங்கினார்கள். கடைசியில் எல்லாரும் நித்திரையாய் விட்டார்கள். இதைக் குருக்களுடைய மகன் கண்டு தகப்பனாரைப் பார்த்து, "ஐயா இந்தச் சனங்களெல்லாம் உறங்குகிறார்களே; சிவராத்திரியில் நித்திரை செய்வதே குற்றம். கோயிலில் நித்திரை செய்வது அதிலுங் குற்றம். புராணங் கேட்க வந்தவர்கள் நித்திரை செய்வது இன்னும் அதிக குற்றம். இவர்கள் சிவராத்திரியிற் கோயிலிலே புராணம் படிக்கும்பொழுது நித்திரை செய்தல் எவ்வளவு பெரிய குற்றம்" என்றான்.

அது கேட்ட குருக்கள் "மகனே, பழிப்பன பகரேல் என்று ஔவையார் சொல்லியிருப்பது தெரியாதா? நீ இப்போது அவர்களிலே குற்றஞ் சொல்லியது அவர்கள் செய்த குற்றத்திற் பெரிய குற்றம். இந்தச் சிவராத்திரி தினத்திலே விழித்திருந்து புராணம் படித்த புண்ணியத்திலும் பார்க்க, இவர்களிலே குற்றம் சொல்லியதால் வந்த பாவம் அதிகமானது. பிறரிலே உள்ள குற்றத்தை மற்றையோர்க்கு ஒருபோதுஞ் சொல்லாதே. எங்கள் ஒவ்வொருவரிலும் நூற்றுக்கணக்கான குற்றங்கள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அறிந்து அவைகளை விலக்குதல் எங்களுடைய கடனாம். எங்களுடைய குற்றங்களை அறிந்து அவைகளை நீக்குவதற்கே போதிய நேரம் எங்களுக்கில்லை. மற்றயவர்களிலுள்ள குற்றத்தை ஆராயத் தொடங்கினால் எங்களுக்குக் காலமும் வராது. ஆதலினாலே, பிறரிலே குற்றம் சொல்வது மிகப் பெரிய குற்றமாய் முடிகின்றது. இவர்களைக் குற்றம் சொன்னதினாலே, உன்னுடைய விரத பலன் போய்விட்டது. ஒருநாளும் பிறர்மேற் குற்றம் சொல்லாதே. நீ ஒரு மனுஷனாய் வந்தபின் உனக்குக் கீழ்ப்பட்டவர்கள் இருந்தால், அவர்களைத் திருத்துவதற்காக அவர்களுடைய குற்றத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டலாம். ஒருவருடைய குற்றத்தை மற்றொருவருக்குச் சொல்வதினால் என்ன பலன்?" என்றார். மகன் அவர் சொல்லியதைக் கேட்டு அப்படியே நடந்தான்.

**(நன்றி : சைவபோதம் முதற் புத்தகம்)**

## சீலமெனும் தெய்வத் திருவுடைமை ஞாலந்தனிற் சிறந்த நற்பொருள் - சீலம், தருமதீபிகை

***சீலமெனும் தெய்வத் திருவுடைமை யேயிந்த***
***ஞாலந் தனிற்சிறந்த நற்பொருள்காண் - மூலம்***
***தெரிந்ததனைக் கைக்கொண்டார் தேவரெலாம் போற்றும்***
***விருந்தினராய் மேவிநிற்பர் மேல் (311)***

*(கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார்)*

**பொருளுரை**

*உலகில் உயர் பெருந்திருவாய் ஒளி பெற்றுள்ளது சீலமே. அம் மூல நிலையை உணர்ந்து அதனை உரிமையாக உவந்து கொண்டவர் தேவரும் போற்றும் மேன்மையாளராய்ச் சிறந்து அரிய பல இன்ப நலங்களை அடைந்து பெரிய நிலையில் திகழ்வர் என்கிறார் கவிராஜ பண்டிதர்.*

*ஒழுக்கம், உணர்வு, குணம், தருமம், புனிதம் முதலிய இனிய இயல்புகள் எல்லாம் சீலம் என்னும் ஒரு சொல்லில் அடங்கியுள்ளன. சீவனின் இனிய கனிவாய் அது இலங்கியுள்ளது.*

*இம்மையிலும், மறுமையிலும் பெருமகிமைகளை நல்கி இறுதியில் உயிர்க்கது உய்வைத் தருதல் கருதி சீலத்தை தெய்வத் திரு என்றது சீலமுடையானே திருவாளன் ஆகும்.*

*உடம்பை மட்டும் ஓம்பி உலக ஆடம்பரங்களை வளர்த்து விட்டு விரைந்து ஒழிந்து போகின்றதே யாண்டும் இயல்பாகவுடைய பொய்ம்மைத் திருவினும் வேறுபாடான மாறுபாடு தெரிய இங்கே மெய்ம்மையான தெய்வத் திரு மேவி வந்தது.*

*தன்னையுடையானைத் திவ்விய நிலையினன் ஆக்கி எவ்வழியும் சீலம் செவ்விய சீர்த்திகளை விளைத்தருள்கின்றது. தீது யாதும் மருவாமல் நீதி நெறியில் நிலைத்து ஒழுகும் ஒழுக்கமே சீலமாதலால் அது விழுப்பங்களுக்கெல்லாம் விளைநிலமாய் வளம் மலிந்து நிலவி நலம் மிகுந்து திகழ்கின்றது.*

*சீலம் உடையவர் மனித சமூகத்தில் அதிசய நலங்களை அடைந்து துதி செய்யப் பெறுகின்றார். தரும தேவதையும் அவர் கருதியபடியெல்லாம் கருணை புரிந்து வருகின்றது. கொடியவரும் அவர்முன் அடியவராய் அடங்கி இனிய நீர்மையுடன் அமர்ந்து இதம் புரிகின்றனர்.*

**கலித்துறை**

*(மா விளம் விளம் விளம் மா)*

*(விளம் வருமிடத்தில் மாங்காய்ச்சீர் வரலாம்)*

> **காலம் இன்றியும் கனிந்தன கனி ; நெடுங் கந்தம்,**
> **மூலம் இன்றியும் முகிழ்த்தன, நிலனுற முழுதும் ;**
> **கோல மங்கையர் ஒத்தன, கொம்பர்கள் - இன்பச்**
> **சீலம் அன்றியும், செய்தவம் வேறுமொன்(று) உளதோ? (44)**

வனம் புகு படலம், அயோத்தியா காண்டம், இராமாயணம்

தரும் குணசீலனான இராமன் புகுந்தமையால் கொடிய பாலைவனமும் இனிய சோலையாய்க் கனி, காய், கிழங்குகளை உதவி நின்றது என இப்பாடல் உணர்த்துகிறது. அற்புத நலங்களை அளித்தருளுதலால் சீலமே செய்தவம் என நேர்ந்தது.

தெய்வீக நிலையில் செழித்து நிற்றலால் சீலமுடையவர் மேலான நலன்களை எளிதே அடைந்து கொள்கின்றனர். அஃது இல்லாதவர் வறிதே இழிந்து படுகின்றனர்.

'சீலம் இல்லவர்க்கு உணர ஒண்ணாத சிற்பரன்' - கந்த புராணம், என்று முருகக் கடவுளை இங்ஙனம் குறித்திருக்கின்றனர். சீலம் உடையவர்க்கே கடவுள் காட்சி எளிதாம் என்னும் உண்மையை இதனால் உணர்ந்து கொள்கிறோம்.

சீலம் என்பது செய்தவமாய்ச் சிறந்துள்ளமையின் தெய்வம் அதன் கைவசமாய்க் கனிந்து நிற்கின்றது, சத்தியம் முதலிய உத்தம நீர்மைகள் தோய்ந்து சித்தசுத்தி வாய்ந்து சிவசக்தி பாய்ந்திருத்தலால் சீலன் தெய்வ தரிசனத்திற்குத் தனி உரிமையாளனாய் இனிதமைந்து நிற்கின்றான். சீலம் தெய்வ நிலையமாக உள்ளது.

> **சீலமும் அவை தரும் திருவு மாயுளன்**
> **ஆலமும் வித்து மொத்(து) அடங்கும் ஆண்மையான். (74)**

இரணியன் வதைப் படலம், யுத்த காண்டம், இராமாயணம்

ஆலம் வித்துப்போல் அடங்கியுள்ள திருமால் சீலத்தின் உருவமாய் நின்று ஞாலம் காத்து அருள்கின்றான் என இது காட்டியுள்ளது.

தவம், கருமம், கடவுள் எனச் சீலம் புகழ்ந்து போற்றப்படுதலால் அதன் அருமையும் பெருமையும் அமைதியும் அறியலாகும். அரிய பல உறுதி நலங்கள் அதில் மருவியுள்ளன.

சீலமும், தருமமும், செம்மையும் ஆகிய இம்மூன்றையும் மூல மூர்த்திகளான மூவரும் முறையே தம் கோலங்களாகக் கொண்டுள்ளனர் என்று வசிட்ட முனிவர் இராமனுக்கு உபதேசித்திருக்கின்றார். முனிவர் மொழி இனிய ஒளியுடையது.

தேவதேவர்களுடைய திவ்விய குணமாய்ச் சீலம் இங்ஙனம் சிறந்து நிற்கின்றமையால் அதன் நிலைமை தலைமைகள் நினைந்து சிந்திக்கத்தக்கன. சீலத்தால் மனம் புனிதம் ஆகின்றது. அதனால் மனிதன் தெய்வீகம் பெறுவதால் அது தெய்வ சம்பத்தாய்ச் சிறந்து மிளிர்கின்றது. அவ்வுண்மையை உய்த்துணர்ந்து நன்மையுறவே தெய்வத் திரு என ஈண்டு அது செப்ப நேர்ந்தது. தவம், தானம், ஞானம் முதலிய எவற்றினும் முத்திப் பேற்றிற்குச் சீலமே முதன்மையாக நிற்றலால் அதனை மேலோர் தலைமையாகப் போற்றுகின்றனர்.

***சீல மின்றி நோன்பின்றிச்***
***செறவே இன்றி அறிவின்றித்***
***தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்***
***சுழன்று விழுந்து கிடப்பேனை***
***மாலும் காட்டி வழிகாட்டி***
***வாரா வுலக நெறிஏறக்***
***காலம் காட்டி ஆண்டானைக்***
***கொடியேன் என்றோ கூடுவதே?*** *(திருவாசகம்)*

*சீலத்தை இங்ஙனம் தலைமையாகக் கருதிப் பேணி மாணிக்கவாசகர் உருகியிருக்கிறார். மேலான பதவிக்குச் சீலம் முதல் உரிமையாயுள்ளமையை இவற்றால் உணர்ந்து கொள்ளுகின்றோம்.*

'*சீலம் இல்லாச் சிறியனேன்*' என நம்மாழ்வார் தவித்திருக்கிறார். பெரியன் ஆக விரும்பின் சீலம் மருவியாக வேண்டும்.

***சீலம் தாங்கித் தானம் தலைநின்று***
***மேலென வகுத்த ஒரு மூன்று திறத்துத்***
***தேவரும் மக்களும் பிரமரும் ஆகி***
***மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்.*** *(137 – 140), மணிமேகலை –24*
*ஆபுத்திரன் நாடு அடைந்த காதை*

உயிர்கள் உயர்ந்து சிறந்த தெய்வ போகங்களை நுகர்தற்குச் சீலமே மூல காரணம் என இதில் குறித்திருக்கும் நிலையைக் கூர்ந்து நோக்க வேண்டும். கருணை முதலியன கனிந்து புனிதம் மருவி வருதலால் சீலமுடையவர் பிறவி தீர்ந்து பேரின்பம் அடைகின்றனர்.

தோடார் இலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழல் மேய
வரதன் பயந்த அறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை
குணனாக நாளும் முயல்வார்
வீடாத இன்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்தல் நாளும் இலவே (வீரசோழியம்)

**கலி விருத்தம் (விளம் விளம் மா கூவிளம்)**

(மாச் சீரின் இறுதியில் குறிலோ, குறில் + ஒற்றோ தான் வரும். நெடில், நெடில் + ஒற்று வராது)

*சீலமுற்(று) உயர்ந்தவர்ச் சேரின் வீடுறும்*
*மாலையுற்(று) அறிவிலார் மருங்க டைந்திடின்*
*வேலையுற்(று) அலைதுரும் பென்ன வெம்பவக்*
*கோலமுற்(று) இறந்திறந் துழலல் கூடுமே (பாகவதம்)*

சீலம் முத்தியில் உய்த்தருளும்; சீலமுடையவரைச் சேர்ந்தவரும் மேலான பதவியை அடைவர்; அதனை அடையாதவர் கடையராயிழிவர் என இவை உணர்த்தியுள்ளன. இவ்வாறு பேரின்ப சாதனமாய்ப் பெருகியிருத்தலால் சீலத்தை யாவரும் விழைந்து கொண்டாடுகின்றனர்.

**அறுசீர் விருத்தம்**
(விளம் மா தேமா அரையடிக்கு)

பவழவாய்ச் செறுவு தன்னுள்
நித்திலம் பயில வித்திக்
குழவிநா றெழுந்து காளைக்
கொழுங்கதி ரீன்று பின்னாக்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ்
கேட்டிரேல் பிணிசெய் பன்மா
உழவிர்காண் மேயுஞ் சீல
வேலியுய்த் திடுமின் என்றான்.

(379 நாமகள் இலம்பகம், சீவக சிந்தாமணி)

கருப்பையுள் விதைத்த சுக்கில வித்திலிருந்து மனிதன் பிறக்கின்றான்; பாலன், குமரன், கிழவன் என வளர்கின்றான்; அவ்விளைவு பழுது படாதபடி சீலம் ஆகிய வேலியை இட்டுப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என இது உரைத்திருக்கிறது. உருவகமாய் வரைந்துள்ள உரையின் உட்கோள் ஊன்றி உணரத்தக்கது. பயிருக்கு வேலிபோல் உயிருக்குச் சீலம்.

சீலத்தால் மனித வாழ்வு புனிதம் அடைந்து இனிது வளர்ந்து இன்பம் சுரந்து வருகின்றது. அவ்வரவு நிலையை உணர்ந்து அதனை உறவுரிமையாய் உவந்து கொள்க என நூல்கள் இங்ஙனம் ஆவலோடு நன்கு உணர்த்தி வருகின்றன. ஆன்ம பரிபாகம் எய்தி எல்லா மேன்மைகளையும் ஒருங்கே பெற்றுச் சீலமுடையார் உயர்ந்து போதலால் 'மேல் மேவி நிற்பர்' என அவரது மெய்யான நிலைமை தெரிய வந்தது.

**நேரிசை வெண்பா**

***சீலன் சிவன்கண்டான் சீலமிலான் என்றுமே***
***காலன்கண் காணக் கழிந்தொழிந்தான் - ஞாலம்***
***பிறந்த பயனைப் பெறாதான் பெறுமே***
**இறந்த பயனை எதிர்.**

சீலம் உடையவன் தெய்வக் காட்சி எய்தி முத்தியின்பம் அடைகின்றான். அதனை இழந்தவன் காலன் கைப்பட்டுக் கடுந்துயரம் காண்கின்றான். உறுவதை உணர்ந்து உறுதி நலனை உவந்து கொள்வது உற்ற பிறவியின் உயர் பயனாகும். பேரின்ப மூலமான சீலத்தைப் பேணி ஒழுகுக என்கிறார் கவிராஜ பண்டிதர்.

## அடியார் மனதில் எய்ப்பினில் வைப்பு

**வெளராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ.குகசர்மா**

வங்கியில் சேமிப்புக் கணக்கில் பணம் போடுவது தற்காலத்தில் ஒரு பெருவழக்காக உள்ளது. ஒருவருடைய பிற்காலத்தில் அவர் ஒரு தொழிலும் செய்யமுடியாத காலத்தில் அந்த நிதி உதவும். அந்த நிதியும் ஒரு காலத்திற் குறைந்துவிடும். குறையாத நிதி ஒன்று உண்டு. அந்த நிதியை வைக்கும் இடம் மனம். அந்த நிதி நமக்கொரு குறைவரின் நாம் தேடிச்செல்ல வேண்டியதில்லை. தானே அறிந்து ஏற்ற சமயத்தில் உதவும் அந்த நிதியை சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருப்பாசுரத்தில் எடுத்துக் கூறுகிறார்.

**"நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை**
***நானூறு குறையறிந் தருள்புரி வானை***
***வல்லடி யார்மனத் திச்சை யுள்ளானை"***

என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவார அடிகள்.

மனதே வங்கியாகப் போட்டுவைக்கத் தகுந்த நிதியை எவ்வாறு சேமிப்பது? என்ற வினாவிற்கும் சுந்தரர் வழிகாட்டுகின்றார். ஒரு வங்கியிற் பணம் போட்டுவைப்பதற்குப் பல நிபந்தனைகள் இருக்குமல்லவா? அதேபோல இங்கும் சில நிபந்தனைகள் உண்டு. அவற்றுள் ஒரு நிபந்தனையைத்தானும் உறுதியாகப்

பின்பற்றினால் போதியது. வஞ்சகம் அற்ற மனத்தர்களாய், மறவாத அன்பொடும் சென்று வணங்குதல் ஒருமுறை. இதனையே,

**"நரியார்தன் கள்ளத்தால் பக்கான பரிசொழிந்து நாளும் உன்கிப்**
**பிரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடிவிழும் சிந்தையாரை"**

என எடுத்துக் காட்டுகிறார் சுந்தரர்.

பிரியாத அன்பராய் என்பதற்கு மேலும் உலகத்தோடு ஒட்டிய ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறார். இறைவனிடம் சேர்க்கும் அன்பு கரையிலா அன்பு. அந்த அன்பு எலும்பினை உருக்கி ஐம்புலன்களால் அறியப்படாத இன்பத்தைத் தரவல்லது. அந்த இன்பம் மெய்யுணர்வில் சேர்த்து வளரும் சிறப்பினை உடையது.

**"காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து**
**கரையில் அன்பு எம்பினை உருக்க**
**பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம்**
**புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்க**
**தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத்**
**தலைப்படக் கிடைத்தபின் சைவ**
**ஆண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை**
**விளைவையா ரளவறிந் துரைப்பார்**

எனப் பெரிய புராணம் கூறும். இந்த இன்பத்தை உலகினர்க்குச் சொல்லமுடியாது. "பக்தி முத்திக்குவமை பெத்தம் பேரின்பத்திற்குவமை சிற்றின்பம் என வைத்து" எனத் திருக்கோவையார் உரையில் காணப்படுவது போன்று உலக வழக்கில் கூறுகின்றார். ஒரு பெண்ணிடத்தில் ஒருவனுக்கு ஆசையுண்டாகிறது. அவன் மனது அந்தப் பெண்ணையே கருதிக் கொண்டிருக்கும். பசி முதலியவற்றைக் கருதமாட்டாது. அவன் சிந்தனை முழுவதும் அவள் சிந்தனையே நிறைந்திருக்கும். அவன் வேண்டும் பொருளும் அதுதான். இந்த நிலையையே "அருளிற் பெரியது அகிலத்து வேண்டும் பொருளில் தலையிலது போல்" எனத் திருவருட்பயனும் சுட்டிக்காட்டுகிறது. இதனையே சுந்தரர் உவமை காட்டுகிறார். இடையறாமல் காமநெறியிற் சென்றாரைப் போல் நீங்காமல் சிந்தித்து அன்பராய்ச் சென்று அடிவிழும் அடியாரை, இயமன்வரும் துன்ப நெறியிற் செல்லாமற் பாதுகாக்கும் இறைவனை, சிற்றம்பலம் அமர்ந்த பெருமானைப் பெற்றாம் என்று சுந்தரர் கூறுந் தேவாரம் இறைவனைச் சிந்திக்க வழி காட்டுவதாகும்.

**"பேராது காமத்திற் சென்றார் போலன்றியே பிரியாதுள்கிச்**
**சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன் னடிவீழும் திருவினாரை**
**ஓராது தருமனார் தமர்செக்கி லிடும் போது தடுத்தாட் கொள்வான்**
**பேராளர் புலியூர்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே".**

## சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் இறையடி சேர்ந்தார்



உரும்பிராய் கருணை இல்லத்தின் ஸ்தாபகர்
அமரர் பொன்.தெய்வேந்திரம் நினைவு மண்டபத் திறப்புவிழா



# 1008 சஹஷ்ர லிங்கம்




இந்த சஞ்சிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. (மாசி – 2019)